விலை ரூபா: 20.00

# தமிழ் நாதம்
Thamil Naatham

திங்கள் முதல் வெள்ளி வரை 'தமிழ் நாதம்' உங்கள் கைகளில்...

இராகம் 01 | தாளம் 18 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 29 வெள்ளிக்கிழமை (13.07.2012) | பக்கங்கள்: பதினாறு

# வடக்கு, கிழக்கில் காணிப் பதிவினை கட்டாயப்படுத்தும் சுற்று நிருபம் ரத்து!

வடக்கு, கிழக்கில் மாகாணங்களிலுள்ள காணிகளின் விபரங்களை அதன் உரிமையாளர்கள் பதிவு செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் விதத்தில் விடுக்கப்பட்ட சுற்றுநிருபத்தை விலக்கிக்கொள்வதாக அரசு நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எழுத்து மூலம் உறுதியளித்தது.

இதனையடுத்து, இந்தச் சுற்று நிருபத்தை ஆட்சேபித்து வழக்குத் தாக்கல் செய்திருந்த மனுதாரரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குறித்த வழக்கை விலக்கிக்கொள்ள நீதிமன்றில் இணக்கம் தெரிவித்தார்.

மேற்படி வழக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர்கள் எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா, தீபாலி விஜேசுந்தர ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே அரசின் முடிவை அரசு சார்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரலும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான யுவன்ஜன் விஜேதிலக சமர்ப்பித்தார்.

வடக்கு, கிழக்கில் உள்ள காணிகளை அதன் உரிமையாளர்கள் பதிவு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தும் சுற்றுநிருபம் 2010 ஆம் ஆண்டு காணி ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பதிவுகள் தொடர்பில் பிணக்குகள் எழும் போது அது குறித்து விசாரித்து, காணி உரிமையாளர் யார் என்பதைத் தீர்மானிக்கும் 02

## முள்ளிவாய்க்கால், சிவநகரில் இன்று 162 குடும்பங்கள் மீள்குடியேற்றம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் மற்றும் சிவநகர் பகுதிகளில் 162 குடும்பங்களைச் சேர்ந்த 406 பேர் இன்று மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் மற்றும் சிவநகர்ப் பகுதிகளிலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வவுனியா மெனிக்பார்ம் நிவாரணக் கிராமங்களில் தங்கவைக்கப்பட்டிருந்தவர்களில் 406 பேர் இன்று வெள்ளிக்கிழமை தங்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இதன்படி 141 குடும்பங்களைச் சேர்ந்த 348 பேர் 02





யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக உயர் தேசிய கணக்கியல் வர்த்தக முகாமைத்துவப் பட்டதாரிகள் வேலை வாய்ப்பு நியமனம் கோரி நேற்றைய தினம் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நடத்தினர். (படம் : கே.சந்திரா)

## ஊடகவியலாளர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள், மற்றும் ஊடகவியலாளர்கள் கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் நேற்று ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

இணையத் தளங்கள் மீதான புதிய ஒழுங்குவிதிகளை நீக்குமாறு அவர்கள் வலியுறுத்தியதுடன் ஊடகவியலாளர்களுக்கு எதிரான பயமுறுத்தல்கள், அச்சுறுத்தல்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்தினர்.

ஐ.தே.க. பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, 02

## வருமானவரி அதிகரிப்பு சட்ட மூலத்திற்கு அமைச்சரவை அனுமதி

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இரட்டை வரி விதிப்பை விலக்குவதற்கும் வருமான வரியை அதிகரிப்பதற்குமான நகல் உடன்படிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கமைய சில திருத்தங்களுடன் இந்த நகல் உடன்படிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அமைச்சரவை 02

## சமூக சேவைகள் அமைச்சின் செயலாளராக இமெல்டா



முன்னர் யாழ்ப்பாண அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திருமதி இமெல்டா சுகுமார் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட இவர் சில காலம் கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்தில் உதவிச் செயலாளராகப் பணியாற்றினார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்கள் நேற்று 18 அமைச்சுகளின் செயலாளர்களை நியமித்தார். ஊடகத்துறை அமைச்சின் செயலாளராகச் சரித்த ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

## கோட்டை குண்டு வெடிப்பு சந்தேக நபருக்கு புனர்வாழ்வு

### சட்டத்தரணி நீதிமன்றத்தில் கோரிக்கை

புலிச் சந்தேக நபர்களுக்கு அளிக்கப்படும் புனர்வாழ்வுத் திட்டத்தில் தானும் இணைந்துகொள்வதற்கு அனுமதியளிக்குமாறு, 03.01.2008 ஆம் திகதி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரான கனகசபை தேவதாசன் கோரியுள்ளார்.

மேற்படி தற்கொலை குண்டுத் தாக்குதல் தொடர்பான வழக்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

அப்போது, அரசாங்கத்தின் புனர்வாழ்வுத் திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு தனது கட்சிக்காரரான நாதன் எனும் 02

### கிளிநொச்சி, யாழ்ப்பாணம், கே.கே.எஸ் உட்பட

## 5 தமிழ் பகுதிகளில் பொலிஸ் மோப்ப நாய்கள் பிரிவு

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் நாய்கள் பிரிவை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே 49 நாய்கள் பிரிவுகள் காணப்படுகின்ற நிலையில் மேலும் 6 பிரிவுகளை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்த புதிய பிரிவுகள், கிளி-நொச்சி, யாழ்ப்பாணம், 02

## வவுனியாவில் சிறுவர்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம்

### உணவு சரியில்லை; விளையாடுவதற்கு விடுவதில்லை எனவும் கோஷம்

வவுனியா வைரவபுளியங்குளம் பகுதியிலுள்ள சிறுவர் இல்லமொன்றைச் சேர்ந்த 29 சிறுவர்கள் நேற்றுமுன் தினம் புதன்கிழமை இரவு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது இல்லத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள காவலாளி மற்றும் மேற்பார்வையாளரை மாற்ற வேண்டுமெனவும் தமக்கான உணவுகள் சிறந்த முறையில் 02

## நைஜீரிய எண்ணெய் தாங்கி வெடிப்பு: நூற்றுக்கும் அதிகமானோர் பலி



நைஜீரியாவில் நேற்று எண்ணெய் தாங்கி வாகனமொன்று வெடித்து தீப்பற்றியதால் நூற்றுக்கும் அதிகமானோர் கருகி உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எண்ணெய் தாங்கி வாகனம் விபத்துக்குள்ளாகி எண்ணெய் வழிந்தோடியதால், அந்த 02

# வரட்சியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர நிவாரணமாக ரூ.3565 மில்லியன்

வரட்சியில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அவசர நிவாரணங்களை வழங்கும் சகல வேலைத்திட்டங்களுக்கென அரசாங்கம் 3665 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்தகவலை அமைச்சரவை பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட லோசனைகளுக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக அமைச்சர்கள் தெரிவித்தார். அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை இடம்பெற்றது. தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மேலும் தெரிவிக்கையில்,

வரட்சியினால் தற்பொழுது பல்வேறு மாவட்டங்களில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட விவசாய குடும்பம் ஒன்றிலிருந்து ஒருவரை தேர்ந்தெடுத்து மாதம் ஒன்றுக்கு 6000 ரூபா வருமானம் பெறும் வகையிலான நிவாரண வேலைத்திட்டத்தை அமுல்ப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்படும் கணிப்பீட்டின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்தில் இருந்து தெரிவு செய்யப்படும் ஒருவருக்கு நிவாரணம் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு தெரிவுசெய்யப்படும் நபர், 8 முதல் - 12 நாட்கள் வரை சிறிய நீர்ப்பாசனத் திட்டம், வீதி அபிவிருத்தி போன்ற நடவடிக்கையில் ஈடுபடச்செய்தல்.

பாரிய நீர்த்தேக்கங்களை தோண்டி அவற்றின் கொள்ளவை அதிகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுதல், இந்த திட்டத்தின் கீழ் 1278 நீர்த்தேக்கங்களும், குளங்களும் தோண்டப்படும் இதற்கென 3577 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

நீர்ப்பாசன திணைக்களம், இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் கமநல சேவைகள் திணைக்களம் ஆகியவற்றினால் இந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

குடிநீர் வழங்கல் திட்டம்:

12 மாவட்டங்களிலுள்ள 52 ஆயிரத்து 340 குடும்பங்களுக்கு 30 மில்லியன் ரூபா செலவில் குடிநீர் வழங்கல்,

விவசாய கிணறுகளை புனரமைத்தல்: தேர்ந்தெடுக்கப்பட்ட 4000 விவசாயக் கிணறுகளை ஆழத்தோண்டி புனரமைத்தல்.

இதேவெளை பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள விவசாயிகள் வங்கிகள் மூலம் பெற்றுக் கொண்ட விவசாயக் கடன்களை மீளச்செலுத்துவதை தற்காலிகமாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நிலைமைகள் வழமைக்கு திரும்பிய பின்னர் மீண்டும் அறவிடுதல் தொடர்பாக ஆராயப்படும் என்றும் குறிப்பிட்டார்.

# எட்டு வருடங்களுக்கு முன் கொந்தராத்து அடிப்படையில் தந்தையைக் கொன்ற மகன் கைது

எட்டு வருடங்களுக்கு முன்னர் தனது தந்தையைக் கொல்வதற்கு ஐம்பதாயிரம் ரூபா கொந்தராத்து வழங்கிய மகன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இவர் ஜூலை 19ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குடிகாரத் தந்தையின் தொல்லைகளைப் பொறுக்க முடியாமலேயே அவரைக் கொல்வதற்கு மகன் கொந்தராத்து வழங்கினாரென்று பொலிசார் தெரிவித்தனர். இக் கொலை தொடர்பாக இராணுவத்தை விட்டுத் தப்பியோடிய ஒருவர் மற்றும் மேகன் ஒருவர், அவரது உதவியாளர்கள் இருவர் கைது செய்யப்பட்டனரென்று குருவிற்ற பொலிசார் தெரிவித்தனர்.

குருவிற்ற, வேவதெனியா என்ற இடத்தைச் சேர்ந்த பிரேமரட்ன என்ற 49 வயது நபரே கொல்லப்பட்டவராவர். மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் வயரொன்றினால் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டுள்ளார் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

பெரும் மர்மம் நிறைந்த இக் கொலை தொடர்பான விசாரணைகள் 2007ஆம் ஆண்டு கைவிடப்பட்டது.

'போதை வஸ்துக் குற்றச்சாட்டின் பேரில் மறியலில் இருக்கும் இன்னொரு நபரையும் இக் கொலை தொடர்பாகக் கைது செய்ய விருப்பதாகவும் பொலிஸார் கூறினர்.

## நைஜீரிய எண்ணெய் தாங்கி...(தொடர்)

எண்ணெயை சேகரிப்பதற்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் திரண்டனர். அப்போது திடீரென எண்ணெய் தாங்கி வெடித்து தீப்பற்றியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தீயில் சிக்கி காயமடைந்த சுமார் 50 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நைஜீரியாவின் தென்பிராந்தியத்திலுள்ள ரிவர்ஸ் மாநிலத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இத்தாங்கி உடனடியாக வெடிக்கவில்லை. இதனால் அயலிலுள்ள டெக்ஸி மற்றும் மோட்டார் சைக்கிளோட்டிகள் பலர் வழிந்தோடும் எண்ணெயை சேகரிப்பதற்காக திரண்டனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

திடீரென தாங்கி வெடித்து தீப்பற்றியதால் 93 பேர் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததாக நைஜீரிய வீதி பாதுகாப்பு ஆணைக் குழுவின் அதிகாரியான கயோட் ஒலகுஞ்சு தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தில் குறைந்தபட்சம் 34 மோட்டார் சைக்கிள்களும் அழிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## 5 தமிழ்ப் பகுதிகளில்...(தொடர்)

காங்கேசன்துறை, திருகோணமலை, புத்தளம் மற்றும் தம்புத்தேகம போன்ற பிரதேசங்களில் உருவாக்கப்படவுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் கூறினார். இந்த பிரிவுகளில் உள்ளடக்கப்படும் நாய்களுக்கு வெடிபொருட்களை இனங்காணக்கூடிய பயிற்சிகள், போதைப்பொருள் கண்டுபிடிப்பு மற்றும் திருடர்களை அடையாளம் காணக்கூடியதான பயிற்சிகள் விசேடமாக வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மேற்படி பிரதேசங்களைத் தவிர, போதைப் பொருள் பாவனை அதிகமாகக் காணப்படும் பிரதேச தேடுதல் நடவடிக்கைகளுக்கு மேலதிக நாய்ப் படையினை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## முள்ளிவாய்க்கால் சிவநகரில்...(தொடர்)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சிவநகரிலும் 21 குடும்பங்களைச் சேர்ந்த 58 பேர் மருதம் பற்று பிரதேச செயலகப் பிரிவுள்ள முள்ளிவாய்க்கால் பகுதியிலும் மீளக் குடியமர்த்தப்படுகின்றன.

இன்று காலை இவர்கள் இப்பிரதேசத்துக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

வட மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட மீள் குடியேற்ற வேலைத் திட்டத்தின் கீழ் வவுனியா மெனிக்பாம் நிவாரணக் கிராமத்தில் தங்கியிருந்த 73,277 குடும்பங்களைச் சேர்ந்த 2,46,893 பேர் அவர்களது சொந்த இடங்களில் ஏற்கனவே மீளக் குடியமர்த்தப்பட்டு விட்டனர்.

கதிர்காமர் மற்றும், ஆனந்த குமாரசுவாமி ஆகிய இரு நிவாரணக் கிராமங்களிலும் இன்னமும் 1595 குடும்பங்களைச் சேர்ந்த 5417 பேர் மாத்திரமே மீளக் குடியேற்றத்திற்காக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களது சொந்தப் பிரதேசங்களில் இன்னமும் மிதிவெடிகள், கண்ணிவெடிகள் அகற்றப்படாமல் இருப்பதால் அதை அகற்றப்பட்டு பாதுகாப்பு உத்தரவாதம் பெறப்பட்டதும் விரைவில் இவர்களும் தமது சொந்த இடங்களில் மீள் குடியேற்ற அமைச்சர் நடவடிக்கை எடுக்கும் என அமைச்சு தெரிவிக்கிறது.

## கோட்டை... (தொடர்)

கனகசபை தேவதாசன் விரும்புவதாக சந்தேக நபரின் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் மொஹிடீன் மொஹமட் கூறினார்.

தனக்கெதிராக சட்டமா அதிபர் வழக்குத் தொடரவில்லை என சந்தேக நபர்முறைப்பாடு செய்து எழுதிய கடிதத்தையும் நீதிமன்றில் வழக்குரைஞர் சமர்ப்பித்தார்.

இக்கோரிக்கையை சட்டமா அதிபரின் கவனத்துக்கு தான் அனுப்புவதாக தெரிவித்த நீதவான் கனிஷ்க விஜேரட்ண, சந்தேக நபரை ஜூலை 25 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## ஊடக...(தொடர்)

ஜே.வி.பி. பிரசார செயலாளர் விஜித ஹேரத், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர, விக்கிரமபாகு கருணாரட்ன, சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியை பிரெட்ரிகா ஜேன்ஸ், சந்த்யா எக்னெலிகொட உட்பட பலர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

# இந்தியாவின் மல்யுத்த வீரரும் நடிகருமான தாரா சிங் காலமானார்



கடந்த வாரம் மாரடைப்பு ஏற்பட்டதையடுத்து 83 வயதான அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

எனினும் அவர் உயிர் பிழைப்பதற்கு வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்ததை அடுத்து புதன் கிழமை இரவு அவர் வீட்டுக்கு அழைத்து செல்லப்பட்டார்.

அவரது மூளையில் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்ததாக மருத்துவர்கள் குடும்பத்தாரிடம் தெரிவித்த பின்னர் அவர் தமது இல்லத்துக்கு கொண்டு செல்லப்பட்டார்.

காலமான தாரா சிங் 1960 ஆம் ஆண்டு உலக மல்யுத்தப் பட்டத்தை வென்றவர். பின்னர் பல ஹிந்தி திரைப்படங்களிலும், தொலைக்காட்சித் தொடர்களிலும் நடித்தார்.

இந்தியத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான ராமாயணம் தொடரில் அவர் ஹனுமானாக நடித்தார். அதன் மூலம் அவர் மேலும் மக்களிடம் பிரபலமானார்.

அவர் இந்திய நாடாளுமன்றத்தின் மேலவையில் 2003 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை உறுப்பினராகவும் இருந்தார்.

## உள்நோக்கம் உள்ளது - கருணாநிதி

வடமாகாணசபைத் தேர்தல் தொடர்பிலான அறிவிப்பில் உள்நோக்கம் காணப்படுவதாக திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் வடமாகாண சபைத் தேர்தல் 2013ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெறுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபகஷ தெரிவித்துள்ளார். ஆனால் தேர்தல் நடைமுறை களில் வாக்காளர்கள் பட்டியல் கள் புதுப்பிக்கப்பட வேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார்.

## வருமானவரி..(தொடர்

பேச்சாளரும், அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

நிதி திட்டமிடல் அமைச்சர் என்ற வரையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப் பட்ட யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக மேலும் தெரிவித்தார்.

இந்த நகல் உடன்படிக்கையை கையொப்பமிடுவதற்கு ஏற்கனவே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன் அதன் திருத்தங்களுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவே தற்பொழுது அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

## வவுனியா சிறுவர்கள்...(தொடர்)

வழங்கப்படுவதில்லையெனவும் தாம் விளையாடுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லையெனவும் தெரிவித்து இச்சிறுவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் அத்துடன் இவற்றுக்கான தீர்வை பெற்றுத்தருமாறும் கோரினர்.

வீதியிலிறங்கி வைரவபுளியங்குளம் சந்திவரை சென்ற சில சிறுமியர்களை அங்கு வந்த பொலிஸார் ஆறுதல்படுத்தி மீண்டும் சிறுவர் இல்லத்திற்கு அழைத்து வந்தனர். இருப்பினும் இவர்கள் இல்லத்தினுள் இருந்தவாறு கோஷம் எழுப்பினர்.

இதனையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன் மற்றும் வினோநோகராதலிங்கம், பொது மக்கள், சட்டத்தரணிகள், சமூக ஆர்வலர்கள் ஆர்ப்பாட்ட இடத்திற்கு வந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிறுவர்களின் குறைநிறைகளை கேட்டறிந்துகொண்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன் மற்றும் வினோநோகராதலிங்கத்திடம் கேட்டபோது,

"தங்களது சிறு சிறு பிரச்சினைகளை முன்வைத்துள்ள இச்சிறுவர்கள், இவற்றுக்கான தீர்வை பெற்றுத்தருமாறு கோருகின்றனர். இவர்கள் தங்களுக்கு நேற்றிரவு வழங்கப்பட்ட உணவை காண்பித்து இது உட்கொள்ள முடியாதுள்ளதாகவும் தெரிவித்தனர். அத்துடன் இவர்கள் வெளியில் சென்றுவரவும் விளையாட்டுக்களில் ஈடுபடவும் விரும்புவதாகவும் எனினும் இவற்றுக்கான அனும[illegible] இவர்களுக்கு வழங்கப்பட வில்லை யெனவும் கூறினர்.

இவ்வாறான நிலைமை இவர்களுக்கு மன ரீதி யான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கு மெனவும் இதனால் இவர்கள் வேறு வழியின்றி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன், 6 சிறுமிகளை பொலிஸார் வேறு சிறுவர் இல்லத்திற்கு உடனடியாக மாற்றியுள்ளதாகவும் இவர்களை மீண்டும் அதே சிறுவர் இல்லத்திற்கு அழைத்துவர வேண்டுமெனவும் அல்லது தங்களை அவர்களிடம் அழைத்துச் செல்ல வேண்டுமெனவும் இச்சிறுவர்கள் கோருகின்றனர்" என்றார்.

## வடக்கு, கிழக்குக் காணிப்...(தொடர்)

அதிகாரத்தை சம்பந்தப்பட்ட பிரதேச அரச அதிகாரிகள், இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் போன்றோரைக் கொண்ட பிரதிநிதிகள் குழுவிடம் ஒப்படைக்கவும் இந்த சுற்றுநிருபத்தில் வகை செய்யப் பட்டிருந்தது.

இந்த நடவடிக்கையை ஆட்சேபித்து நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தாக்கல் செய்திருந்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம், கடந்த வருடமே பூர்வாங்க விசாரணை செய்த பின்னர் சுற்றுநிருபத்தினால் விதிக்கப்பட்ட காலக்கெடு பற்றிய ஏற்பாட்டுக்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவு பிறப்பித்தி ருந்தது.

இந்த மனு நேற்று மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்ட போது எதிர் மனுதாரர்களான காணி அமைச்சர், காணி ஆணையாளர் நாயகம், வடக்கு, கிழக்கு மாவட்டங்களின் காணி ஆணையாளர்கள் போன்றவர்களின் சார்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் புவன்ஜன் விஜேதிலக மேற்படி சுற்றுநிருபத்தை முற்றாக விலக்கிக் கொள்ள அரசு தயார் என எழுத்தில் உறுதி தெரிவித்தார். இதனையடுத்து, தேவை எழுந்தால் இதுபோன்ற ஒரு வழக்கை மீண்டும் தாக்கல் செய்வதற்கான தமது உரிமையை பதிவு செய்து கொண்டு வழக்கை விலக்கிக் கொள்ள மனுதாரர் தயார் என மனுதாரர்கள் தரப்பு சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்தனர். அதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்தது.

# முஸ்லிம் காங்கிரஸிடமிருந்து சமிக்ஞைகள் இல்லை: தனித்து போட்டியிடும் நிலையில் தமிழ் கூட்டமைப்பு

கிழக்கு மாகாண சபைக்கு நடைபெறவுள்ள தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனித்தே போட்டியிட முடிவு செய்துள்ளதாக, அதன் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராஜா தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து போட்டியிடும் நோக்கில் கூட்டமைப்பு அவர்களுடன் பல முறை பேச்சு வார்த்தைகளை நடத்தியதாகவும், ஆனால் இதுவரை அவர்களிடமிருந்து ஆக்கபூர்வமான பதில் கிடைக்காத காரணத்தால், இன்று வரை தனித்து போட்டியிடுவது என்கிற முடிவையே தாங்கள் எடுத்துள்ளதாகவும் அவர் கூறுனார்.

இது தொடர்பில் கட்சியில் ஒருமித்த கருத்து நிலவுவதாகவும் பொன் செல்வராஜா தெரிவித்தார்.

இத்தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனித்தே போட்டியிடும் பட்சத்தில், தம்மால் தனியாக அங்கு ஆட்சி அமைக்க முடியுமா என்கிற கேள்விகளும் இருக்கின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்திலே தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் சம அளவில் வாழ்ந்து வரும் சூழலில், தனித்தே ஆட்சி அமைக்க முடியும் என்று தமது கட்சியால் முற்றுமுழுதாக நம்பிவிட முடியாது என்றும் அவர் கூறினார்.

எனினும் மற்ற கட்சிகளிடமிருந்து சாதகமான பதில்கள் கிடைத்தால் தனித்து போட்டியிடுவது என்று இதுவரை எடுக்கப்பட்டுள்ள முடிவை, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டம் மறுபரிசீலனை செய்யும் வாய்ப்பும் உள்ளது என பொன் செல்வராஜா தெரிவித்தார்.

## க.பொ.த.உ/த. பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

கல்விப் பொதுத் தராதர உயர்தர மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சையும் கருத்தரங்குகளும் வலிகாமம் கல்விவலய பாடசாலைகளில் நடத்தப்படுகின்றன.

இவற்றில் மாணவர்கள் பங்குபற்றி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கின்றார்.

இலவசமாக வினாத்தாள் விடைகளும் புள்ளித்திட்டமும் வழங்கப்படுகின்றது.



டெங்கு ஒழிப்பு மாதத்தை முன்னிட்டு கோப்பாய், அச்சுவேலி, கோண்டாவில் பகுதிகளில் இலங்கை தரைப்படையின் 51 மற்றும் 52 ஆவது படைப்பிரிவினர் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மற்றும் விழிப்புணர்வுப் பணிகளில் ஈடுபட்டனர்.

## புகையிரத பாதை புனரமைப்பு பகுதிகளில் கண்ணிவெடி அகற்றல் பணிகள் நிறைவு

யாழ். மாவட்டத்தில் ஜூலை மாதம் முதலாம் திகதி வரையான காலப்பகுதியில் 87.37 வீதமான பிரதேசங்களில் கண்ணி மற்றும் மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக பிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அலுவலர் முருகதாஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் 548 இடங்கள் மிதிவெடி அபாயப் பிரதேசங்களாக இனங்காணப்பட்டன இவற்றில் 504 இடங்களில் மிதி-வெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகவும் இன்னும் 44 இடங்களில் மிதிவெடிகள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக்வும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பெரிதும் எதிர்பார்க்கப்படும் வடபகுதி புகையிரதப் பாதை புனரமைப்புப் பணிக்காக ஆணையிறவு தொடக்கம் காங்கேசன்துறை வரையான பகுதிகளிலும் அதனோடு அண்டிய பகுதிகளிலும் மிதிவெடிகள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முற்றாக நிறைவு பெற்றிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பயிற்சி பத்திரிகையாளர்களுக்கு ஒரு சந்தர்ப்பம்

தமிழ்நாதம் பத்திரிகையில் பயிற்சிப் பத்திரிகையாளர்களாகச் சேர விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் இருபது வயதுக்கு மேற்பட்டவராகவும் 40 வயதுக்குக் குறைவானவராகவும் இருத்தல் வேண்டும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். க.பொ.த சாதாரண தரம் அல்லது உயர்தரம் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரிகள் தமது சுய விபரக்கோவையை அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவு திகதி 20.07.2012.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**
**பிரதம ஆசிரியர்,**
**"தமிழ் நாதம்"**
**267, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## கும்பாபிஷேகம்

(மருதனார்மடம்)

அராலி கரைப்பிட்டி விஸ்வேஸ்வரி ஸ்ரீ காளிகாதேவி ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் 10.20 மணி வரையான சுபமுகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும் கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். கும்பாபிஷேகத்தை சிவாசார்ய சிரோமணி. சரவணபவ செல்வகுமாரக் குருக்கள் நிகழ்த்தி வைப்பார்கள்.

## பொதுக்கூட்டம்

(வல்வெட்டித்துறை)

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையின் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 19ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் 60 அங்கத்தவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். எனவே இவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

## இந்து தர்மாசிரியர் பரீட்சை நாளை

(மருதனார்மடம்)

இலங்கை பரீட்சைத் திணைக்களம் நடத்தும் இந்து தர்மாசிரியர் பரீட்சை நாளை சனிக்கிழமை ஆரம்பமாகின்றது.

சனிக்கிழமை வேதங்களும் ஆகமங்களும், சைவ சமயா சாரியர்கள் எனும் வினாத்தாள்களும் ஞாயிற்றுக்கிழமை சைவசமய வரலாறு, பன்னிரு திருமுறை எனும் வினாத்தாள்களும் 21ஆம் திகதி சனிக்கிழமை ஆலயங்களும் கலைகளும் எனும் ஐந்து வினாத்தாள்களை அடக்கி நடைபெற இருக்கின்றது.

மிக விரைவில் இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான இறுதி நிலைத் தேர்வும் நடைபெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கௌரவிப்பு விழா

(வல்வெட்டித்துறை)

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியில் சிறுவர் சேமிப்புக் கணக்கை வைத்துள்ள, புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 53 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக் கிளையின் முகாமையாளர் தலைமையில் நடைபெற்ற இக்கௌரவிப்பு விழா அண்மையில் வங்கி மண்டபத்தில் நடைபெற்றது. வட வலய முகாமையாளர் வி.அருளானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

## தமிழ் நாதத்தில் வேலைவாய்ப்பு, பரீட்சை விளம்பரங்கள் திங்கட்கிழமைகளில்

அரசாங்க திணைக்கள, கூட்டுத்தாபன மற்றும் நியதிச் சபைகளில் வேலைவாய்ப்பு விண்ணப்பங்கள் மற்றும் பரீட்சைகள் தொடர்பாக வாராவாரம் அரசாங்க வர்த்தமானியில் வரும் விளம்பரங்கள் ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் "தமிழ் நாதம்" பத்திரிகையில் பிரசுரமாகும்.

## இன்றைய இராசி பலன் (13.07.2012)

நந்தன வருடம் ஆனித்திங்கள் 29ஆம் நாள் வெள்ளிக்கிழமை
**நட்சத்திரம்:** பரணி பின்னிரவு 1.17 வரை அதன் பின் கார்த்திகை
**திதி:** தசமி பின்னிரவு 3.03 வரை அதன் பின் ஏகாதசி
**சுபநேரம்:** 6.00-7.30 இராகு காலம்: 10.30-12.00
(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)

**மேடம்:** நற்செய்தி, வியாபார நன்மை, தெய்வ அனுகூலம்
**இடபம்:** கொடுக்கல் வாங்கல் சிக்கல், வீண் அலைச்சல், வாக்கு விரோதம்
**மிதுனம்:** பொருள் இலாபம், உஷ்ணரோகம், வீண் விரோதம்
**கடகம்:** பொருள் நஷ்டம், நினைத்ததைத் சாதித்தல், சகோதர சஞ்சலம்
**சிங்கம்:** பொருள் வரவு, தொழில் விருத்தி, மகிழ்ச்சியான செய்தி
**கன்னி:** பணச்செலவு, வயிற்றுரோகம், களஸ்திர சுகக்குறைவு
**துலாம்:** சுபகாரிய விருத்தி, உறவினர் வருகை, நண்பர்களுக்கு உதவி
**விருட்சிகம்:** காணிப்பிரச்சினை, வாகன நஷ்டம், குடும்பத்தில் அமைதியின்மை
**தனுசு:** பொருள் வரவு, தொழில் முன்னேற்றம், அந்நியர் உதவி
**மகரம்:** மனச்சோர்வு, யோசனை மிகுதி, நம்பிக்கையீனம்
**கும்பம்:** பணவரவு, தேகநலம், சகோதர உதவி
**மீனம்:** மனக்கவலை, தொழில் சஞ்சலம், யாத்திரை

**ஜோதிடர் பால.இரத்தினசேகர்.**

# சூரசம்ஹாரம் நவம்பர் 18ஆம் திகதி நடைபெறுவதே உசிதமானது

## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இந்து மாமன்றமும் கூட்டறிக்கை

எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகும் இவ்வருட கந்தசஷ்டி விரதத்தின் நிறைவாக, 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாயங்காலமே சூரசம்ஹாரம் நடைபெற்று மறுநாள் திங்கட்கிழமை காலையில் பாரணை இடம்பெறுவதே உசிதமானது என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், அகில இலங்கை இந்து மாமன்றமும் ஒருங்கிணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கந்தசஷ்டி விரதம் தொடர்பாக திருக்கணித, வாக்கிய பஞ்சாங்கங்களில் வேறுபாடு காணப்பட்டதால் இந்து மக்களுக்கு குழப்பம் ஏற்படாதவகையில் அதனை ஆராய்ந்து சரியான தீர்வினைக் காணும் முயற்சியில் அகில இலங்கை இந்து மாமன்றம், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து ஈடுபட்டது.

இது சம்பந்தமாக இந்து மாமன்றம் இந்து சமய ஆலோசனை சபையொன்றினை அமைத்திருந்ததுடன், இருபஞ்சாங்க கணிப்பாளர்களையும், இந்து மதக் குருமார்களையும் மற்றும் சமய அறிஞர்களையும் அழைத்து ஜூன் மாதம் 16ஆம் திகதியன்று கொழும்பிலும், இம்மாதம் (ஜூலை) முதலாம் திகதியன்று யாழ்ப்பாணத்திலும் ஆலோசனைக் கூட்டங்களை ஏற்பாடு செய்து நடத்தியிருந்தது.

(07 ஆம் பக்கம் பார்க்க)

# கலை இரசினையைத் துறக்காததுறவி குருத்துவவாழ்வில் பொன்விழாக் காணும் அருட்திரு. மரியசேவியர் அடிகளார்

அருட்தந்தைமரியசேவியர் அடிகளார் குருத்துவவாழ்வில் 50 பொன்னானஆண்டுகளைநிறைவுசெய்துபொன்விழாக் காண்கின்றார். 50 ஆண்டுகள்! அரை நூற்றாண்டு! ஒருமனிதனின் வாழ்க்கையில் மிகப்பெரும் காலப்பகுதி! அடிகளார் தனதுகுருத்துவவாழ்வின் பெரும்பகுதியைகலைக்காகவே அர்ப்பணித்தவர். அவர் ஒருதுறவிதான். ஆனால் கலை இரசனையைத் துறக்காததுறவி.

திருமறைக்கலாமன்றம் என்னும் பெயரில் கலைக்கானஓர் வலுவானஅமைப்பைஏற்படுத்திஅதன் வழியாகபலகலைஞர் களைஒன்றிணைத்தார். கடந்த 50 ஆண்டுகள் அவர் ஆற்றியகலைப்பணிகாலத்தால் அழியாதது. ஒருகலைஞனாக,கவிஞனாக,பாடலாசிரியனாக, வசனகர்த்தாவாகநாடக இயக்குனராகஅவருடையகலைப் பங்களிப்புபரந்துவிரிந்ததாகும்.

எதிர்வரும் ஞாயிறு 15.07.2011 அன்றுதனதுகுருத்துவ வாழ்வில் 50 ஆண்டுகளைநிறைவுசெய்து பொன்விழாக் கொண்டாடும் அடிகளாரின் கலா இரசனையும் கலைஆழுமையும் வியப்புக்குரியது.

அவர் தனதுகலைப்பணியைஓர் இயக்கரீதியாகமேற்கொண்டார். திருமறைக்கலாமன்றத்திலே இணைந்தகலைஞர்களைஒருகுடும்பஉறவுக்குள் கட்டிஎழுப்பினார். இம்மன்றத்தில் தொடர்ச்சியாகஅங்கம் வகித்தகலைஞர்கள் கலை தொடர்பானஅதிலும் குறிப்பாகநாடகம் தொடர்பானஅறிவையும்,அனுபவத்தையும் பெற்றுக்கொண்டனர். காலஓட்டத்தில் இவர்கள் நாடகம் தொடர்பானசிலபரிசோதனைமுயற்சிகளைமேற்கொள்ளும் அளவுக்குவளர்ச்சியும், முதிர்ச்சியும் பெற்றனர். இதனால் இக்கலைஞர்களைக் கொண்டு அவர் அற்புதமானகலைப் படைப்புக் களைவெளிக்கொணர முடிந்தது.

"கலைவழி இறைபணி"என்னும் அவருடையகாத்திரமான-தாரகமந்திரம் அவருடையகலைப்பயணத்தின் திசையைசிறப்பாக இனம் காட்டியது. கத்தோலிக்கதிருச்சபையின் ஓர் பொறுப்புமிக்கக்குருவாக இருந்துகொண்டுதிருச்சபையின் ஒழுங்குவிதிகளுக்குட்பட்டுஅவர் தனதுகலைப்பணியைசிறப்பாகஆற்றினார். இயேசுவின் துன்பம் மிகுந்தசிலுவைமரணத்தைச் சித்தரிக்கும் "திருப்பாடுகளின் காட்சி" யைமுதன் முதலாகமனிதர்களைக்கொண்டு நடிக்கவைத்துபாடுகளின் கொடூரத்தைபார்ப்போர் உணர்ந்துமனம் கசியும் அளவுக்கு-மனமாற்றம் பெற்றுநல்வாழ்வுவாழமுயற்சிக்கும் அளவுக்குஅவருடையநெறியாழ்கைஅமைந்திருந்தது. திருப்பாடுகளின் காட்சிஎன்றால் அன்றும் இன்றும் அதுதிருமறைக்கலாமன்றத்தான் என்னும் அளவுக்குயாழ் மண்ணிலும், ஏனைய இடங்களிலும் இக்கத்தோலிக்ககலைவடிவத்திற்கு புது மெருகும், புது முகவரியும் தந்தார்.

அவருடையகலைப்பணிஎவ்வளவுதனித்துவமானதோ அப்படியே அவருடையதனிப்பட்டவாழ்வும் தனித்துவமானது. அவருடையவாழ்வுஒழுங்கும் கட்டுப்பாடும் மிகுந்ததாகவேவிளங்கியது. அவர் எதிலும் நேர்த்தியை,முழுமையை, நிறைவைவிரும்பினார். அதனால் அவரோடு இணைந்துகலைப்பணிசெய்த இளையோருக்குஅவர் கண்டிப்பானவராகதெரிந்ததில் ஆச்சரியமில்லை. நேரமுகாமைத்துவம் அவர் இரத்தத்தோடுஒட்டியஒன்றாகும். "திருமறைக்கலாமன்றநேரம் இப்போது 6.30 மணி."என்பதுபோன்றஅறிவுப்போடு யார் வந்தாலும் வராவிட்டாலும் குறித்தநேரத்தில் நிகழ்ச்சிகளைத் தொடங்குவதன் மூலம் தமிழரின் பண்பாட்டோடுஒன்றித்துவிட்ட "நேரம் பிந்தும்"பண்பாட்டிற்குஅவர் செயல் வடிவில் சவால்விட்டார். நேரம் தவறாமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றகொள் கைப் பிடிப்போடு அடித்து விழுந்துபோய் அரைமணித் தியாலம், முக்கால் மணித்தி யாலம்,ஏன் ஒருமணித்தி யாலம் எனசில இடங்களில் காத்துக் கிடக்கும் பாது திரு மறைக்கலாமன்றத்தின் நேரம் தவறாமைசெயற்பாடுநினைவுக்கு வரும்!

அடிகளார் குறுகியதமிழ்த் தேசியவாதத்திற்குள் அகப்பட்டவரல்ல. இன, மத,மொழிபேதங்களுக்குஅப்பால் அவர் சிந்தித்தார்,செயற்பட்டார். யுத்தம் கடுமையாகநடைபெற்றுக்கொண்டிருந்தகாலப்பகுதியில்கூட சிங்களமக்களுடன் அவர் கலை மூலமானஉறவுப் பாலநிகழ்வுகளை முன்னெடுத்தார். அதன் மூலம் கலையைஉறவுப் பாலமாக,சமாதானத்தின் கருவியாகஅவர் பயன்படுத்தினார். நாட்டின் பல இடங்களில் திருமறைக்கலா மன்றத்தின் கிளைகளை ஏற்படுத்தியஅவர் சிங்களப் பகுதிகளிலும் தனதுமன்றத்தின் கிளைகளைநிறுவிசிங்களக் கலைஞர்களையும் இணைத்துக்கொண்டமை அவரதுபரந்துபட்ட பார்வையின் வெளிப்பாடாகவே அமைந்தது.



அவருடையகலைமுயற்சிகள் யாழ்ப்பாணத்தையும் கடந்து இலங்கைநாடுமுழுவதும் வியாபித்திருந்தது.

யாழ்பாணத்தில் அவர் கட்டியெழுப்பியுள்ள பிரமாண்டமான "அழகான "கலைத்தூது" போன்றகட்டடங்கள் காலங்கள் பலகடந்தும் அவரதுகலைப்பணியின் கதைசொல்லும்!

**- தமிழ்நேசன் அடிகளார்**

# கழுகுக் கண்கள்

தேசிய வருமானத்தில் பெரும் பகுதியை செல விட்டு நாட்டின் நாலாபக்கங்களிலும் அரச வைத்தியசாலைகள் அமைக்கப்பட்டு மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையை நாட்டில் சீராக இருந்து வருகின்றது. ஆயினும் வெளிநாடுகளில் இருந்து மருந்துகளை இறக்குமதி செய்வதில் பெரும் தில்லுமுல்லுகள் நிலவுவதை தனியார் மற்றும் அரச ஆஸ்பத்திரிகள் மீது நோட்டம் விட்டபோது கழுகுக் கண்களால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இலங்கைக்கு மருந்துகளை இறக்குமதி செய்வதில் பெரும் மோசடிகள் இடம் பெறுவதாகவும் இந்தியா பங்களாதேஷ் போன்ற தெற்காசிய நாடுகளில் இருந்து தரக்குறைவான மருந்துகள் இறக்குமதி செய்யப்படுவதாகவும் அவை நோயாளியைக் குணமாக்குவதை விட பெரும்பாலும் நோய்க்குணத்தை மோசமடையச் செய்வதாகவும் பல குற்றச்சாட்டுக்கள் எழுந்ததையும் நான் அறிந்து கொண்டேன்.

இலங்கைக்கு வெளிநாடுகளில் இருந்து மருந்துகளை பெரும்பாலும் பல்தேசிய நிறுவனங்களும் பெரிய நிறுவனங்களுமே இறக்குமதி செய்கின்றன. இந்த மருந்துகள் அதிக விலையில் பொதுச்சந்தையில் விற்பனைக்கு விடப்படுகின்றன.

இந்தப் பல்தேசிய நிறுவனங்கள் தாங்கள் இறக்குமதி செய்யும் மருந்துகளை வைத்திய நிபுணர்களிடம் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி அவற்றையே நோயாளிகளுக்கு வாங்குமாறு சிபாரிசு செய்ய வேண்டும் எனவும் நிர்ப்பந்தித்து வருவதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

தங்கள் கோரிக்கைக்கு இணக்கம் தெரிவிக்கும் வைத்திய நிபுணர்களுக்கு ஓராண்டுக்கு ஒரு தடவை தங்கள் சொந்த செலவில் மேற்கத்தைய நாடு ஒன்றில் விடுமுறையை மகிழ்ச்சியோடு கழித்து நாடு திரும்புவதற்கும் இந்தப் பல்தேசிய நிறுவனங்கள் வசதிகளைச் செய்து கொடுப்பதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

தங்களுக்கு இவ்வளவு தாரம் சலுகைகளையும் உதவிகளையும் செய்யும் இந்தப் பல்தேசிய நிறுவனங்களுக்கு கைமாறு செலுத்துவதற்காக ஒரே மருந்து சிக்கனமான விலையில் விற்கப்பட்டாலும் அந்த மருந்தை வாங்காமல் விலை உயர்ந்த மருந்தை வாங்குமாறு இந்த வைத்திய நிபுணர்கள் நோயாளிகளை வற்புறுத்துவதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

பொதுவாக ஒரு மருந்துக்கு வைத்திய ரீதியில் ஒரே பெயர்தான் இருக்கின்றது. ஆனாலும் இந்தப் பல்தேசிய நிறுவனங்கள் அவற்றுக்கு வர்த்தகப் பெயர்களை வைத்து அந்த மருந்துகளை அழகான டப்பாக்களில் அடைத்து சந்தைப்படுத்துகின்றன. உதாரணமாக அந்த மருந்து வில்லை ஒன்றை சாதாரண வில்லைக்குப் பத்து ரூபாவுக்கு வாங்க முடியுமானால் அந்த மருந்து வர்த்தகப் பெயருடன் விற்கப்படும் போது ஒரு வில்லையின் விலை 80 முதல் 100 ரூபாவரை உயர்ந்து விடுகின்றன. ஆயினும் இரண்டு மருந்து வில்லைகளும் ஒரே அளவு சக்தியைப் பெற்றிருப்பதும் நோயைக் குணமாக்கும் வலுப் பெற்றிருக்கின்றன.

இவ்விதம் அப்பாவி நோயாளிகளை சுரண்டிப் பணம் சம்பாதிக்கும் சுயநலம் படைத்த பல்தேசிய மருந்து நிறுவனங்களும் தங்கள் சொந்த நன்மைக்காக இவ்விதம் விலை உயர்ந்த மருந்துகளை நோயாளிகளை வாங்கச் செய்யும் வைத்திய நிபுணர்களும் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளை விட மனித உயிர்களுக்கு தீங்கிளைக்கும் சமூக விரோதிகள் என்று நாம் அடையாளம் கண்டால் அது தவறு என்று எவரும் மறுத்துரைக்க மாட்டார்கள்.

இலங்கையில் இலவச வைத்திய வசதிகளை அரசாங்கம் நாட்டு மக்கள் அனைவருக்கும் பெற்றுக்கொடுக்கப்படுவது ஒரு பாராட்டுக்குரிய விடயம். ஆயினும் இந்த இலவச வைத்திய வசதியை கொச்சைப் படுத்தக்கூடிய வகையில் சில வைத்திய நிபுணர்கள் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறும் ஏழை நோயாளிகளை இவ்விதம் விலை உயர்ந்த மருந்துகளை வாங்கச் செய்து நோயினால் பாதிப்புக்குள்ளான இந்த அப்பாவிகளை கடன் பெற்று மருந்து வாங்கக்கூடிய அவல நிலைக்கும் தள்ளிவிடுவதை தடுப்பது குறித்து அதிகாரிகள் கவனம் செலுத்துவது அவசியம்.

எங்கள் நாட்டிலும் இவ்விதம் வைத்திய நிபுணர்களும் பல்தேசிய மருந்து இறக்குமதி நிறுவனங்களும் நோயாளிகளைச் சுரண்டி கொள்ளை இலாபம் ஈட்டுவதைத் தடுப்பதற்கு உடனடியாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விடயத்தில் கழுகுக் கண்கள் தொடர்ந்தும் கண்காணித்துக் கொண்டிருக்கும். தவறு இழைக்கும் வைத்தியர்களை தண்டிக்கச் செய்வதற்கு கழுகுக் கண்கள் தூங்காது.

# நிமலரூபனின் மரணம் பற்றி ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் கேள்வி எழுப்பப்படும்

## - சம்பந்தன் எம்.பி.

இனியும் சர்வதேச சமூகத்தை ஏமாற்ற முடியாது என்பது இலங்கை அரசாங்கத்திற்கு நன்றாகத் தெரியும். சர்வதேச சமூகத்திடமிருந்து தப்பித்துக்கொள்ள முடியாத நிலைக்குள் இலங்கை அரசாங்கம் சிக்கியுள்ளது. இந்த நிலையில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலை முன்கூட்டியே நடத்தி, கிழக்கு மக்கள் தம்மோடு தான் இருக்கின்றார்கள் என்று காட்டி சர்வதேச சமூகத்தை ஏமாற்றலாம் என்றும் அரசாங்கம் நினைக்கின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை நண்பகல் அளவில் பன்குளம் பகுதியில் சாந்திபுரம் என்ற இடத்தில் நடத்தப்பட்ட கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வில் பங்குபற்றி சம்பந்தன் உரையாற்றினார். சாந்திபுரம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் ராஜாமணி தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

அங்கு சம்பந்தன் மேலும் உரையாற்றுகையில்

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் மீளாய்வுக்கூட்டம் ஒன்று எதிர்வரும் நவம்பரில் நடைபெறவிருக்கின்றது. வவுனியா சிறையிலிருந்து மஹர சிறைக்கு மாற்றப்பட்ட நிமலரூபன் கைதியின் மரணம் பற்றி அக்கூட்டத்தில் பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்படும்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் மற்றும் ஐநா நிபுணர் குழு அறிக்கை ஆகியன குறித்து கட்டாயமாக பதிலளிக்க வேண்டிய காலம் இலங்கை அரசாங்கத்திற்கு வந்து கொண்டிருக்கின்றது. அதிலிருந்து இலங்கை அரசாங்கம் தப்பிக்க முடியாத நிலை ஏற்படும். சரியான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்காவிடில் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்.

# இளைஞன் கைது

யாழ். ஆரியகுளம் பகுதியில் இளம் பெண் ஒருவரின் கையைப் பிடித்து இழுத்த இளைஞன் ஒருவரை யாழ்.பொலிஸார் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்துள்ளனர்.

குறித்த இளைஞன் வீதியில் சென்று கொண்டிருந்த இளம் பெண்ணின் கையைப் பிடித்து இழுத்த போது அப்பெண் அலறியுள்ளார். இதனையடுத்து வீதியில் சென்றவர்கள் அவ்விளைஞனை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

# புங்குடுதீவில் இன்று போஷாக்குக் கண்காட்சி

வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு நடாத்தும் சுகாதாரம் மற்றும் போஷாக்கு விழிப்புணர்வுக் கண்காட்சி இன்று 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் வேலணை சுகாதார வைத்திய அதிகாரி அருண புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக சுகாதார சேவைகள் பிர-திப் பணிப்பாளர் செல்வி. சி.சிவராணி, வைத்தியகலாநிதி சு.சிவகணேஸ், யுனிசெவ் யாழ் வலய பொறுப்பாளர் முசா. யுவிசு, வைத்தியகலாநிதி திருமகள் சிவசங்கர், வைத்திய கலாநிதி இ.சிவசங்கர், தீவக வலய கல்விப் பணிப்பாளர் வீ.இராதாகிருஷ்ணன், புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் கே.கணேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளுவார்கள். (ப)

# கரவெட்டி பிரதேச சபை கூட்டத்தில் பெரும் அமளி துமளி, கைகலப்பு

(வல்வெட்டித்துறை)

கரவெட்டி பிரதேச சபையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் பெரும் அமளி துமளி ஏற்பட்டதோடு, கைகலப்பு ஏற்படும் அளவுக்கு நிலைமை மோசமாக இருந்தது. ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குமிடையில் பெரும் வாக்குவாதமும் ஏற்பட்டது. கரவெட்டி பிரதேச சபைத் தலைவர் பொ.வியாகேசு தலைமையில் கூட்டம் காலை பத்து மணியளவில் ஆரம்பமாகியது

மொத்த உறுப்பினர்கள் பதி-னெட்டுப் பேரில் ஒருவரைத் தவிர ஏனைய 17 உறுப்பினர்களும் கூட் டத்துக்குச் சமுகமளித்திருந்தனர். ஆளும் தரப்பான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவரே கூட்டத்துக்குச் சமுகமளிக்கவில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களும் வருகை தந்திருந்தனர். பல்வேறு தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டபோது ஆளுந்தரப்பினர்களுக்கும் எதிர்த் தரப்பினருக்குமிடையில் கடும் வாக்குவாதங்கள் ஏற்பட்டன. ஆத்திரமுற்ற ஆளுந்தரப்பு உறுப்பினரொருவர் எதிர்த்தரப்பு உறுப்பினரின் ஆசனத்தை நோக்கிச் சென்று அவருக்கு அடிப்பதற்கு கை ஓங்கினார். அப்போது சபையில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது உடனே வேறொரு உறுப்பினர் குறுக்கிட்டுத் தாக்குதல் நடத்தாமல் தடுத்தார்.

# முன்னாள் முதலமைச்சர்களுக்கு மீண்டும் வாய்ப்பு : அரசாங்கம்

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களின்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் முதலமைச்சர்கள் அநேகமாக முதலமைச்சர் வேட்பாளர்களாக நியமிக்கப்படுவார்கள் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

"குழுவின் அறிக்கைக்காக நாங்கள் காத்திருக்கின்றோம். முன்னாள் முதலமைச்சர்களுக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின்றபோதிலும், அவர்கள் அநேகமாக கலைக்கப்பட்ட மாகாணசபையின் வேட்பாளர்களென நியமிக்கப்படுவார்கள்" அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல கூறினார்.

கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சராக சிவநேசத்துரை சந்திரகாந்தன் பணியாற்றிய அதே வேளை, சப்ரகமுவ மற்றும் வடமத்தி மாகாணசபைகளின் முதலமைச்சர்களாக பேர்ட்டி பிரேம்லால் திஸாநாயக்க மற்றும் மஹிபால ஹேரத் கடமையாற்றினர்.

ஜூலை மாதம் 12ஆம் திகதியிலிருந்து 19ஆம் திகதிவரை எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுமென தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

# சம்பூர் காளியம்மன் கோவிலுக்கு செல்ல கடற்படையினர் தடை

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம் சம்பூர் பகுதியில் உள்ள பத்திரகாளி அம்மன் கோவிலுக்கு செல்ல உள்ளூர் மக்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையினர் இத் தடையை தற்காலிக தடை விதித்துள்ளதாக அப்பகுதி மக்கள் கூறுகிறார்கள்.

சம்பூரில் இருந்து 2006 ஆம் ஆண்டு போர் காலத்தில் இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் இன்னமும் நான்கு முகாம்களில் தங்கியுள்ளனர்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு இந்த முகாம்களில் உள்ளவர்கள் அந்தக் கோவிலுக்கு வாரம் ஒரு முறை சென்று வழிபட்டு வர அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

அவ்வகையில் தமது பல ஆண்டு கால நேர்த்திக் கடன்களை செலுத்த சென்ற போது, கடற்படையினர் அனுமதி மறுத்துவிட்டனர் என்று, சம்பூர் வாசிகளை மூதூர் பிரதேச சபையில் பிரதிநிதித்துவப்படுத்தும், உறுப்பினர் ஆர்.நாகேஸ்வரன் தெரிவித்தார்.

# இலங்கையில் மரியொட் ஹோட்டல்

மரியொட் இன்டர்நெஷனல் என்னும் பிரபல ஹோட்டல் நிறுவனம் இலங்கையை "வெலகம பெ மரியட் றிசோட் அன்ட் ஸ்பா" என்னும் 5 நட்சத்திர ஹோட்டல் ஒன்றை வெலிகமவில் நிறுவவுள்ளது.

இந்த ஹோட்டல் 11 மாடிகளில் 220 அறைகளை கொண்டிருக்கும். சுற்றுலாத்துறை வளர்ச்சிக்காக சகல அம்சங்களையும் இலங்கை கொண்டுள்ளது. நாம் இதை பயன்படுத்தி இலங்கையில் எம்மை நிலைநிறுத்துவோம் என ஆசிய பசுபிக் மரியொட் முகாமைத்துவ பணிப்பாளர் சைமன் கூப்பர் கூறினார்.

# இலங்கை - இந்திய மீனவர் விவகாரம்: மன்னாரில் இன்று கலந்துரையாடல்

இந்திய இழுவைப் படகுகளின் தாக்கம் மற்றும் வடக்கு மீனவ சமூதாயம் தற்போது முகம் கொடுத்து வரும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் ஒன்று தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏறபாட்டில் இன்று வெள்ளிக்கிழமை காலை மன்னார் கொலிடே விடுதியில் இடம்பெறவுள்ளது.

இந்திய இழுவைப் படகுகளின் வருகையினால் வடக்கு மீனவர்கள் முகம் கொடுத்து வரும் பிரச்சினைகள், யுத்தம் மற்றும் ஏனைய காரணங்களினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மீனவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் கடந்த 2004 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில் இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மேலும் ஒரு படிமுறையாக ஆன்மீக தலைவர்கள், - துறைசார் நிபுணர்கள் மற்றும் மக்கள் பிரச்சினைகளில் அக்கரையுடன் செயற்படும் செயற்திறனாளிகளோடு இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஆலோசனைகள் மற்றும் செயற்பாடுகளை கண்டறிவதற்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்றை இன்று வெள்ளிக்கிழமை காலை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவையின் தேசிய அமைப்பாளர் ஹர்மன் குமார தெரிவித்தார்.

# சவுதிக்கு பணியாட்களை அனுப்புவதை இலங்கை கைவிட வேண்டும்

## ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க

சவுதியில் புத்தர் சிலையை வழிபட்ட துங்கசிறிக்கு கழுத்து வெட்டப்பட்டால் யார் பொறுப்பு கூறுவது? சவுதி அரேபியாவிற்கு பணியாளர்களை அனுப்புவதை இலங்கை நிறுத்திக் கொள்ள வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார். சவுதிக்குச் செல்லும் இலங்கை பணியாளர்கள் துன்புறுத்தல்களை அனுபவித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சவுதி அரேபியாவில் புத்தர் சிலை வழிபாட்டில் ஈடுபட்ட துங்கசிறி என்ற இலங்கை பணியாளர் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவரை விடுதலை செய்யுமாறு கோரியும் கொழும்பு சவுதி அரேபிய தூதுரகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இதில் பௌத்த பிக்குகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இங்கு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க,

சவுதியில் புத்தர் சிலை வழிபாட்டில் ஈடுபட்ட துங்கசிறி கைது செய்யப்பட்டுள்ளார். துங்கசிறியின் குடும்பத்திற்கு மத வழிபாட்டிற்கு புத்தர் சிலை முன் விளக்கு ஏற்றியதால் கைது செய்யப்பட்டார் என அறிக்கை மூலம் கூறிய வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தற்போது தாயத்து வைத்திருந்ததால் தான் கைது செய்யப்பட்டதாக பொய் கூறுகிறது.

இலங்கையில் உள்ள சவுதி அரேபிய தூதரகத்திற்குச் சென்ற பிக்குகள் மதிக்கப்படவில்லை. தூதரக அதிகாரிகளால் பிடித்து தள்ளப்பட்டனர். இங்கே இப்படி என்றால் சவூதியில் உள்ள துங்கசிறிக்கு என்ன நடக்கும்?

இங்கு எந்த மத, அரசியல் பிரிவினையும் இல்லை. ரிசானா நபீக்கிற்காகவும் ஆரியவதிக்காகவும் நாம் இங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோம்.

நாளை அல்லது நாளை மறுதினம் துங்கசிறியின் கழுத்து வெட்டப்பட்டால் யார் பொறுப்பு கூறுவது? இதற்கு முன்னரும் இலங்கையர்கள் நால்வர் ரியாத்தில் தலை வெட்டப்பட்டுள்ளனர். துங்கசிறிக்கு அவ்வாறு நடந்தால் இங்கு பாரிய பிரச்சினை ஏற்படும். இது அச்சுறுத்தல் அல்ல.

சவுதியில் இலங்கையர்கள் 6 லட்சம் பேர் பணிபுரிகின்றனர். அவர்கள் அங்கு துன்புறுத்தப்படுகின்றனர், கழுத்து வெட்டப்படுகின்றனர். வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகின்றனர், கசையடி வாங்குகின்றனர் இதனை பார்த்துக் கொண்டு அரசாங்கம் என்ன செய்கிறது? துங்கசிறியை நாட்டுக்கு அழைத்துவரும் வரை போராட்டத்தை தொடர்ந்து நடத்துவோம் என்றார்.

தமிழ்நாதம்
Thamil Naatham
ஜூலை மாதம் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை

## முள்ளிவாய்க்கால் அழிவு பற்றி முன்கூட்டியே சொன்னவர் அமிர்

தமிழ்மக்களின் தலைவனாகக் கருதப்பட்ட அ.அமிர்தலிங்கம் 1989ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் கொல்லப்பட்டு இன்றோடு 23 வருடங்கள் கடந்து விட்டன. அமிர்தலிங்கமும் குறிப்பிட்ட சில தமிழ் இளைஞர்களைப் போல இளமைக் காலத்தில் ஆயுதப் போராட்டத்துக்கு ஆதரவளித்தவர்தான். மேடைகளில் அவர் வீராவேசமாக முழங்கினாலும் அவ்வப்போது வன்செயல் நடவடிக்கைகளைக் கண்டித்தும் வந்திருக்கிறார். ஆனாலும் வயதின் முதிர்ச்சியோடு, ஆயுதப் போராட்டம் மற்றும் தனித் தமிழ்நாடு போன்ற ஆயுத மற்றும் அரசியல் நிலைப்பாடுகளிலும் முதிர்ச்சி பெற்றுவிட்டார்.

1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் பதினைந்தாம் திகதி எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் அரசாங்கம் சிங்களம் மட்டும் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. 56 வாக்குகளைப் பெற்றுச் சட்டம் நிறைவேறியது. எதிராக 29 வாக்குகள் வழங்கப்பட்டன. தமிழரசுக் கட்சியினரும் இடதுசாரிகளும் எதிர்த்து வாக்களித்தனர். இச்சட்ட மசோதாவைக் கண்டித்துப் பேசிய அமிர்தலிங்கம், "தமிழ் இளைஞர்கள் என்றைக்குமே சிங்கள மொழியை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்" என்று சொன்னார்.

"ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதனை உங்கள் தொண்டைக்குள் திணிப்போம்" என்று சிங்களத் தீவிரவாதியான ஓர் எம்.பி. குறுக்கிட்டுக் கூறினார்.

"எங்கள் தொண்டைக்குள் திணித்தால், உங்கள் முகத்தில் காறித் துப்புவோம்" என்று பதிலடி கொடுத்தார் அமிர்தலிங்கம்.

இதே வாய்த்தர்க்கத்தின் வெளிப்பாடுகளையே கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாக இந்த நாட்டின் அரசியல், சமூக, ஆயுத முனைகளில் காணக் கூடியதாக இருந்தது. 1970களின் ஆரம்ப வருடங்களிலும் அதற்குப் பின்னரும் கூட விரும்பியோ, விரும்பாமலோ ஆயுத எழுச்சியைச் சில வேளைகளில் அமிர் ஆதரித்துப் பேசிய சந்தர்ப்பங்களும் உண்டு. அவர் அப்போது சந்தர்ப்பவாத அரசியலின் சிறைக் கைதியானார். ஆனாலும் 1981இல் அதிகாரப் பரவலாக்கலுக்கு வழிவகுக்குமென்ற தீவிர நம்பிக்கையோடு மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் களத்திலும் தமிழ் மக்களை ஈடுபடுத்தினார்.

இது தமிழ் மக்கள் மத்தியில் மிதவாத அரசியலுக்கும் ஆயுத அரசியலுக்குமிடையில் மோதல்களை ஏற்படுத்தியது. அமிரைக் களப் பலியாக்குவதற்கான ஆரம்ப வேட்டுக்களுக்கு இங்குதான் அடித்தளங்கள் இடப்பட்டன. சிங்களத் தேசியத் தீவிரவாதமும், தமிழ்த் தேசியத் தீவிரவாதமும் ஒன்றிலொன்று தங்கியிருந்து இனவாதச் சாக்கடை அரசியலை முன்னெடுத்துச் சென்றன. பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தின் வழிசல் நடவடிக்கைகளே இவை.

இரு தரப்பு இனவாத சக்திகளின், குறிப்பாக இனவாத அரசியல் சக்திகளின் உசுப்புதல்களே இந்த நாட்டை வேட்டைக் காடாக மாற்றியது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், சிங்களம் மட்டும் சட்டம், மொழிவாரித் தரப்படுத்தல், வேலை வாய்ப்பில் பாரபட்சம், அவ்வப்போது இடம்பெற்று வந்த தமிழ் மக்கள் மீதான தாக்குதல்கள் எல்லாமே பிரச்சினைகளை எரிசரமாக்கியது. இதனால்தான் இரு தரப்பிலும் வகுப்பவாத சக்திகள் வளர்ச்சி பெற்றன.

1970களில் சில வேளைகளில் தீவிரவாதம் பேசிய அமிர்தலிங்கம் 1980களில் முற்றுமுழுதான மிதவாதியாகவே மாறினார். 1981இல் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி பங்குபற்றியது. அதிகாரப் பரவலாக்கலுக்கு மாவட்ட அபிவிருத்திச் சபைகள் வழிவகுக்குமென்று அமிர் நம்பினார். ஆனாலும் பண்டா-செல்வா ஒப்பந்தத்துக்கு நடந்தது போல, டட்லி-செல்வா ஒப்பந்தத்துக்கு நடந்தது போல மாவட்ட அபிவிருத்தி சபையும் மா..... வட்டமாகவே முடிந்தது.

1983இல் தமிழ் மக்களுக்கு எதிரான இனசங்காரம் ஜே.ஆர். அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்ட பின்னர் தனித் தமிழ்நாட்டுக் கோ'ம் ஓங்காரமாக எழுந்தது. இந்தியா தமிழ்க் குழுக்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கினாலும் நாடு பிரிவினையை என்றுமே ஆதரிக்காது என்றும் அமிர் புரிந்து கொண்டது உண்மை.

இந்திய ஆதரவோடு இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமென்றும் அமிர் நம்பினார். அதுவே அவரது உயிருக்கும் வினையாகியது.

1982ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஐந்தாம் திகதி நியூயோர்க்கில் நடைபெற்ற உலகத் தமிழர் மாநாட்டில் தனிஈழச் சர்ச்சைகள் எழுந்தபோது அமிர் துணிவாகவே பேசினார். ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்துக்குள் கள்ளமாக ஓடிப்போய் மேடையேறித் தமிழ்ஈழக் கோஷம் போட்ட கிருஷ்ணா வைகுந்தவாசனுக்கும் அமிருக்குமிடையில் உலகத் தமிழர் மாநாட்டில் வாய்த் தர்க்கமும் ஏற்பட்டது. அமிர், கிருஷ்ணா வைகுந்தவாசனுக்குச் சொன்னார். "நாம் எதிர்கொள்ளும் பாரிய பொறுப்பை உணர்ந்து கொள்கிறோம். எமது செய்காரியங்களில் நாம் பொறுப்பற்றவர்களாகச் செயற்பட முடியாது. புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் சாய்மனைக் கதிரைகளில் அமர்ந்து கொண்டு போதனை செய்வது இலகுவானது. எமது நிலையில் உங்களை வைத்துப் பாருங்கள். நாமும் மனிதர்கள்தான். நாம் தவறிழைத்திருக்கலாம். மகாத்மா காந்தி கூட, தான் தவறிழைத்ததை ஏற்றுக் கொண்டுள்ளார். தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கை தமிழ் மக்களின் அழிவுக்கே வழிவகுக்கும்"

இப்படிச் சொன்னார் அமிர். முள்ளிவாய்க்கால் அழிவு பற்றி முன்கூட்டியே அவர் தீர்க்கதரிசனமாகச் சொன்னார் அல்லவா?

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2219506, பக்ஸ்: 021-2219505
e-mail: tnaatham@yahoo.com

# அதிகாரப் பகிர்வு – ஜனநாயகம் மற்றும் சர்வதேச அனுபவங்கள்

பிரிவினைவாதப் பிரச்சினைகளை எதிர்கொண்ட பல்வேறு நாடுகள் ஜனநாயக ரீதியாக அதிகாரப் பகிர்வு செயல் திட்டங்களை நடைமுறைப் படுத்தி, இனங்களுக்கிடையில் அமைதியையும் சமாதானத்தையும் கட்டியெழுப்பிக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். தற்போது முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத்திட்டம் விவாதத்துக்கு உட்பட்டு, தாம் ஏற்றுக் கொள்ளாத பகுதிகளைத் திருத்தி, அதிகாரத்தைப் பரவலாக்கும் அரசியல் கட்டமைப்பொன்றினை ஸ்தாபிப்பதன் மூலம் இனப் பிரச்சினைக்கு நிலையான ஓர் அரசியல் தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியுமென நான் நம்புகிறேன்.

இன்று எமது நாட்டில் தலை விரித்தாடும் இனப் பிரச்சினையானது, மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட பிரச்சினையாகும். அந்தப் பிரச்சினை தனிநாடொன்றினைக் கோரும் அளவுக்கு நீண்ட தூரம் பயணித்திருக்கிறது. இந்தத் தனிநாட்டுக் கோரிக்கையை அடிப்படையில் ஓர் அரசியல் பிரச்சினையாகவே கருத முடியும். புலிகள் இயக்கத்துடன் முகங்கொடுக்கும் இந்த நிலையை இவ் அரசியல் பிரச்சினையின் பெறுபேறேயன்றி, அதற்கான மூல காரணம் அல்ல என்பதனை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பெறுபேறுக்கு நீண்ட கால வரலாறு ஒன்றுண்டு. இந்தப் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடலை வரலாற்றின் எந்தவொரு யுகத்திலிருந்தும் ஆரம்பிக்கலாம். அண்மைக் கால வரலாற்றைக் கொண்டு இந்தப் பிரச்சினைக்குள் பிரவேசித்தால், அல்லது சிங்கள மக்களின் வரலாற்று ஞாபகங்களை அடிப்படையாகக் கொண்டு, பண்டைய காலத்தை நோக்கியும் இக் கலந்துரையாடலை ஆரம்பிக்கலாம்.

தற்போது முன்வைக்கப் பட்டுள்ள பிரதான வாதம் என்னவென்றால், இந்த அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் இந்த நாடு எட்டுப் பிரிவுகளாகத் துண்டாடப்படும் என்பதாகும். அதிகாரப் பகிர்வை எதிர்க்கும் இந்தக் கருத்தின் அடிப்படை என்னவென்றால், இது ஒரு சிங்கள நாடு, இது சிங்களவர்களாகிய எமக்கு மட்டுமே உரித்தான நாடு. இதிலே இவ்வளவு காலமாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவே ஏனைய அனைவரையும் விட எமக்கு இந்த நாடு தொடர்பாக ஒரு பெரும் உரிமை இருக்கிறது என்பது சிங்களவர்களாகிய எமது மனங்களுக்குள் இருக்கும் சிந்தனையாகும். இவ்வாறான பின்னணியுடன்தான் இப் பிரச்சினைக்கான வாதங்கள் தற்போது ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன.

இத்தீர்வுத் திட்டம், நாட்டைப் பிரிப்பதற்கு உறுதுணையாக அமையாது என்பது எனது கருத்தாகும். பிரிந்திருக்கும் நாட்டை ஒன்றிணைக்கவே இத்தீர்வுத் திட்டம் உறுதுணையாக அமையும் என்பது எனது கருத்தாகும். அதிகாரத்திலிருக்கும் அரசாங்கம், அதிகாரப் பகிர்வு பற்றிய சில விடயங்களையும், தாம் பெற்றிருக்கும் அபிமானத்தையும் பணயம் வைத்து, பல்வேறு எதிர்ப்புகளை எதிர்கொள்ள வேண்டி வருமெனத் தெரிந்தும் இத் தீர்வுத் திட்டத்தை முன்வைத்துள்ளது.

1987ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட மாகாண சபைப் பிரேரணைகள் தொடர்பாகவும் நாட்டில் ஏற்பட்ட நிலைமையை நாம் நன்கு அறிவோம். இந்த நிலைமையைக் கருத்தில் கொண்ட போதும் அரசு ஒரு நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும். 1959ஆம் ஆண்டின் பண்டா - செல்வா உடன்படிக்கை, 1965இல் டட்லி-செல்வா உடன்படிக்கை மூலம் பிராந்திய சபைகள் மற்றும் மாவட்ட சபை பிரேரணைகள் முன்வைக்கப்பட்ட போதும், அப்போதைய அந்த அரசுகள் தமது மக்களின் அபிமானத்தைப் பணயம் வைத்தே இச் செயல்திட்டங்களை முன்வைத்தன. அதனோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், தற்போது முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத்திட்டம், சுதந்திரத்தின் பின்னர் இந்த நாட்டில் இன

**பேராசிரியர் நவரட்ன பண்டா,**
**அரச அறிவியல்துறை,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**

ஒற்றுமையைக் கட்டியெழுப்பவும், இந்த நாட்டின் எதிர்கால சுபீட்சத்துக்காகவும், மேற்கொள்ளப்பட்ட, தீர்க்கதரிசனமான அபிவிருத்தி நடவடிக்கையென்றே அதனைக் கூற முடியும். அர்த்தபுஷ்டியுள்ள இந்தத் தீர்வுத் திட்டத்தை, இனப் பிரச்சினை தொடர்பாக வழங்கப்பட்டிருக்கும் பண்பாடான பரிகாரம் எனவும் கூறலாம்.

இந்த நாட்டில் இனப் பிரச்சினையென்ற ஒன்று இல்லையென்று சிலர் கூறிவருகின்றனர். ஆயினும் அரசியல் பிரச்சினையாக நோக்கக்கூடிய பிரிவினைவாத நெருக்கடியொன்று இரண்டு தசாப்தங்களாக எம் முன்னால் செயற்பட்டுவருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. குறிப்பாக 1910ஆம் ஆண்டு போன்ற இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப கட்டத்தில் பெரும்பான்மைத் தலைமைத்துவமும் சிறுபான்மைத் தலைமைத்துவமும் ஒன்றிணைந்து அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் விதம் பற்றிப் பல பிரச்சினைகள் தோன்றியிருந்தன. இந்த நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார அதிகாரங்களை நாம் அனைவரும் பங்காளிகளாக இணைந்து எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றி கலந்துரையாடினர். அன்று பெரும் கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்திய ஐம்பதுக்கு ஐம்பது என்ற கோரிக்கை 1940களில் முன்வைக்கப்பட்டதும் இந்த அடிப்படையில்தான் என்று கூறலாம்.

ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை ஒற்றையாட்சி கட்டமைப்பின் கீழ் தமிழ் தலைவர்கள் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள மேற்கொண்ட இறுதி முயற்சியாகவே நான் பார்க்கிறேன். தமிழ் தலைவர்கள் காலனித்துவ யுகத்தில் ஒற்றையாட்சிக் கட்டமைப்பின் கீழ் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான முயற்சிகளை எடுத்தார்கள். 1910-11 களில் தமிழ்த் தலைவர்கள் ஒரு விகிதாசார அடிப்படையில் சிங்கள தமிழ் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு சட்ட நிரூபண சபையை நிறுவ முயற்சித்தனர். 1921ஆம் ஆண்டு வரையும் இந்தத் தமிழ்த் தலைவர்கள் சட்ட நிரூபண சபையில் சிங்கள மக்களின் பிரதிநிதிகள் இரண்டு பேருக்கு ஒருவர் என்ற ரீதியில் தமிழ் மக்கள் பிரதிநிதிகளை ஒழுங்கு படுத்துமாறு கேட்டிருந்தனர். 1921ஆம் ஆண்டு முதல் 1930ஆம் ஆண்டு வரை தமிழ்த் தலைவர்கள் மறுபடியும் சிங்கள மக்களின் பிரதிநிதிகள் மூவருக்கு ஏற்ப தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இருவர் என்ற விகிதாசாரத்தைக் கொண்ட ஒரு சட்டவாக்க சபையைக் கோரி நின்றனர். 1940ஆம் ஆண்டு ஆகும்பொழுது ஜி.ஜி.பொன்னம்பலம் முன்வைத்த ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை ஓர் தவறான செயலென்று வர்ணித்தமை தவறானதென்றே நான் கருதுகின்றேன். ஏனெனில் அந்தக் கோரிக்கை மூலம் ஐம்பது சதவீத சிங்களப் பிரதிநிதிகள் அடங்கிய சபையில் எஞ்சிய ஐம்பது சதவீதமும் சகல சிறுபான்மை இனங்களையும் உள்ளடக்கிய ஒன்றாக அமைய வேண்டும். எனவே அந்தக் கோரிக்கை இருந்தது. அதாவது அனைத்துச் சிறுபான்மையினரும் ஆட்சியில் பங்குகொள்ள வேண்டும் என்ற கருத்தையே அது கொண்டிருந்தது. டொனமூர் ஆட்சியமைப்பின் கீழ் குடியேற்றப் பாணியில் அமைந்த ஆட்சியமைப்பு கூட அதிகாரப் பகிர்வினை முன்னெடுத்துச் சென்ற ஒரு யாப்பாகவே காணலாம். அதாவது அங்கு செயல்புரிந்த சிறுபான்மைத் தலைவர்களும் பெரும்பான்மைத் தலைவர்களும் அமைச்சுப் பதவிகளை வகிக்க அவகாசத்து பெற்றிருந்தனர். குடியேற்ற ஆட்சியின் கீழ் சிறுபான்மை சமூகப் பிரதிநிதிகளும் பெரும்பான்மை சமூகப் பிரதிநிதிகளும் ஆட்சியில் பங்கு கொண்டிருந்தனர். நாட்டை ஆட்சி புரிவதில் ஒரு ஒப்பந்த அடிப்படையிலேயே கருமங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அவ்வாறு இல்லையெனில் ஆட்சியைச் சீராக நடத்த வாய்ப்பு ஏற்பட்டிருக்காது.

இவ்வாறு சிறுபான்மையினரும் பெரும்பான்மையினரும் ஆட்சியில் பங்குகொள்ளக் கூடிய விதத்திலான ஓர் அதிகாரக் கட்டமைப்பை ஏற்படுத்த முடியுமாயின் பலம் வாய்ந்த ஜனநாயக முறையொன்றினை நாம் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பு ஏற்படும். ஆயினும் நாம் ஜனநாயக முறைமையை அவ்வாறு நோக்கவில்லை. அதாவது எமது வரலாற்றில் ஜனநாயகம் பற்றிய அனுபவம் என்னவென்றால், தலைகளை எண்ணி, கூடுதலான தலைகளைக் கொண்டோருக்கு அதிகாரத்தை ஒப்படைப்பதேயாகும். இம் முறைமை மூலம் சிறுபான்மையினர் எப்போதுமே அதிகார மையத்திலிருந்து வெளியே தள்ளப்பட்டிருக்கின்றனர். அல்லது அரசியல் பிரவாகத்திலிருந்து தூரத்தே தள்ளிவைக்கப்பட்டிருந்தனர். அதன் பெறுபேறையே நாம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

(7ஆம் பக்கம் பார்க்க)

# ஒரு இலட்சம் செலுத்தி செய்தி இணையங்களை பதிவு செய்யலாம்

தகவல் ஊடகத்துறை அமைச்சில் பதிவு செய்யப்படும் செய்தி இணையங்கள் வருடாந்திர புதுப்பித்தல் கட்டணங்களை செலுத்தக் கூடியவாறு சட்டத் திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (12) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அமைச்சரவைப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல்ல இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பதிவு செய்யப்படும் புதிய செய்தி இணையங்கள் 100,000 ரூபா பதிவுக் கட்டணமும் வருடாந்திர புதுப்பித்தல் கட்டணமாக 50,000 ரூபாவும் செலுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

1973ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஊடக கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் இத்திருத்தம் செய்யப்படவுள்ளது.

## அதிகாரப் பகிர்வு - ஜனநாயகம்....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

1972ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் மூலமும் பெரும்பான்மையினருக்கு மட்டுமே உரித்தான ஓர் அரசையே ஸ்தாபித்தனர். அதன் பெறுபேறு என்னவென்றால் இந்த ஆட்சிக்குள் நாம் வாழ்வதில் எவ்வித பயனுமில்லை என்ற கருத்தே சிறுபான்மையின மக்களின் மனதில் குடிகொள்ளச் செய்யும். 1976களில் தனிநாட்டுக் கோரிக்கையை நோக்கி சிறுபான்மையின மக்கள் ஒரு பயணத்தை ஆரம்பித்தனர். உண்மையிலேயே இந்த நெருக்கடியின் ஆரம்பமே அதுதான்.

1948இல் ஜி.ஜி.பொன்னம்பலம் முன்வைத்த ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, சோல்பரி ஆட்சி முறையை ஏற்றுக்கொண்டு, காலனித்துவ ஏகாதிபத்தியவாதிகளின் இந்த நாட்டுக்கு அறிமுகப்படுத்திய மத்தியத்துவப்படுத்தப்பட்ட கோட்பாட்டுடன் முன்செல்வதற்கு ஆரம்பித்த பயணத்தின்போது, பிரஜா உரிமைச் சட்டங்கள், பொதுச்சேவைச் சட்டங்கள் போன்றவற்றை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இதன் பின்னர்தான் தமிழ்த் தலைவர்கள் அரசின் மீது சந்தேகக்கண் கொண்டு பார்க்க ஆரம்பித்தார்கள். அவர்களுடைய பிரேரணைகளோ, விதப்புரைகளோ 1950ஆம் ஆண்டாகும்போது சமஷ்டி முறையொன்றினை நோக்கி, அதிகாரப் பரவலாக்கல் கருத்தோடு வளர்ச்சி பெற்றிருந்தது.

தமிழ் மாநிலம், சிங்கள மாநிலம் என்ற முறையில் ஆட்சிக் கட்டமைப்பை ஒழுங்கு செய்து ஒரு மத்திய அரசின் கீழ் மீண்டும் ஒன்றுபடுவோம் என்ற பிரேரணையை தமிழரசுக் கட்சி முன் வைத்தது. இதுபற்றி தமிழரசுக் கட்சித் தலைவர்கள் 1956ஆம் ஆண்டுக்குப் பின்பு பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரைகளை ஹன்சாட் அறிக்கைகளின் மூலம் தெரிந்துகொள்ள முடியும். எஸ்.டபிள்யூ.ஆர்.பண்டாரநாயக்க அவர்களுடன் இச் சமஷ்டி முறையின் கீழ் ஒருமைப்பாட்டுக்கு வருவதற்கு முயற்சி செய்தனர். சமஷ்டி நிலைமையிலிருந்து கீழிறங்கிய நிலையொன்றுக்கு தமிழரசுக் கட்சியை திருத்திக்கொள்ள பண்டாரநாயக்க அவர்கள் 1957இல் பிராந்திய சபைகள் ஒப்பந்தம் மூலம் மனப்பூர்வமாக ஒரு முயற்சியை மேற்கொண்டார். பிரதேச சுயாட்சி முறை மூலம் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் தமிழ் பிரதிநிதிகள் நிர்வாகத்தில் பங்குகொள்ளும் சந்தர்ப்பத்தை வழங்கி, அப்பிரதேச நிர்வாகத்தில் தமிழ்மொழியைப் பாவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கினார். இதன்மூலம் தமிழரசுக் கட்சித் தலைவர்களின் மனதை வெல்வதற்கு எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டார நாயக்கா அவர்கள் முயற்சி செய்தார். அன்று தமிழரசுக் கட்சித் தலைவர்கள் பண்டார நாயக்காவின் பிரேரணைக்கு இணங்கினர். ஆனால் தீவிரவாதிகளின் போராட்டம் முன்னிலைப்பட்டதால் பண்டார நாயக்கா அவர்கள் இந்த ஒருமைப்பாட்டிலிருந்து விலகினார்.

1957இல் பண்டா- செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. எமது நாட்டு மக்கள் இன்று, 1950களிலோ அல்லது 60களின் தசாப்தங்களிலோ வாழ்பவர்கள் அல்ல. தற்போதைய மக்கள் முன்னையரை விட அனுபவங்களைப் பெற்று முதிர்ச்சியடைந்திருக்கிறார்கள். ஆகவே இந்தப் பிரச்சினை பற்றிய ஒரு தீர்மானத்தை மேற்கொள்வதற்கு இந்த மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். இன்று இந்த நாட்டு மக்களில் மானசீகரீதியாக மட்டுமே பிரிந்துள்ளனர். அதாவது நான் சிங்களவன், நான் தமிழன், நான் முஸ்லிம், நான் பறங்கியன் என்ற நிலையிலேயே பிரிந்துள்ளனர். நாம் இலங்கையர்கள் என்று ஒற்றுமைப்படுவதைக் காணமுடியாமல் உள்ளது. ஆகவே இத் தீர்வுத் திட்டம் மூலம் நாடு பிரிவினைவாதத்தை நோக்கிச் செல்லும் என்பது அர்த்தமற்றது. அரசு இத் தீர்வுத் திட்டத்தை முன்வைத்ததன் மூலம் பிரிவினையைக் கைவிட்டு ஐக்கியப்படுமாறு பிரிவினைவாதிகளுக்கு அரசாங்கம் அழைப்பு விடுத்திருக்கின்றது. இந்தத் தீர்வுத் திட்டத்தினை ஆழமாகக் கையாளத் தவறினால், மாகாண சபைப் பிரேரணைகள் போலவே இது வெறும் ஆவணமாக மட்டுமே இருக்கும். பிரிவினைவாதம் தமிழ் மக்கள் மத்தியில் மட்டும்தான் இருக்கிறது என்று கூறமுடியாது. சிங்கள மக்கள் மத்தியிலும் பிரிவினைவாத நோக்குகள் இருக்கின்றன. 1950களில் இருந்தே இது ஒரு சிங்கள நாடு, இது சிங்கள பௌத்த நாடு, இங்கு தமிழர்கள் வாழ்வதானால் எமக்கு கீழ்ப்படிந்தே வாழ வேண்டும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வந்திருக்கிறது. இவை பிரிவினைவாதத்துக்கு வித்திட்ட சிறந்த உதாரணங்கள். நாம் இப்போதும் இவ்வாறான பிரிவினைவாதத்துடன்தான் வாழ்ந்து வருகின்றோம். ஆகவே பிரிவினைக் கருத்துக்கள் பல வருடங்களுக்கு முன்னதாகவே நிலவி வந்திருக்கிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1948களுக்குப் பின்பு இந்த நாட்டிலே அமுல்படுத்தப்பட்ட யாப்புகள், ஒற்றையாட்சி யாப்புகள் என்றே குறிப்பிடப்படுகின்றது. அவ்வாறான ஒற்றையாட்சி முறையின் கீழ் தான் பிரிவினைவாதம் ஆரம்பிக்கப்பட்டது. ஆகவே இன்று பெரும் அழிவை ஏற்படுத்திய இந்த நெருக்கடிக்கு, தமிழ் மக்களின் பிரிவினைவாத செயற்பாடுகளுக்கு பதிலளிப்பதற்கு சில சிங்களத் தலைவர்கள் சிங்கள மக்கள் மத்தியில் பிரிவினைவாதக் கருத்துக்களைப் பயன்படுத்தியையுமே முக்கிய காரணம் எனலாம். புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடிப்பதன் மூலம் மட்டும் இப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர முடியாது. இப் பிரச்சினையைத் தோற்றுவித்த தமிழ் கருவுக்கு மறுபடியும் இவ்வாறான சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் ஆற்றல் உண்டு. மார்க்ஸினுடைய சமயத்தைப் பற்றிய கருத்து இங்கு ஞாபகத்துக்கு வருகிறது. அதாவது, "தீபத்தின் நிழலோடு போராட வேண்டுமானால், தீபத்தை அணைத்து விடுங்கள்" புலிகள் இயக்கமும் தீபத்தின் நிழலைப் போன்றது. தற்போதைய இனப் பிரச்சினைக்குத் தீர்வினைப் பெற்றுக்கொள்ள புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிப்பதால் மட்டும் வாய்ப்புகள் ஏற்படப் போவதில்லை. யுத்தத்தினால் மட்டும் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது. அது புதிய பிரச்சினைகளை மறுபடியும் தோற்றுவிக்கும். யுத்தத்தில் ஒரு சாரார் ஒரு சந்தர்ப்பத்தில் வெற்றி கொள்வர். மற்றொரு சந்தர்ப்பத்தில் மற்றொரு சாரார் வெற்றி கொள்வர். யுத்த வெற்றியுடன் அந்த இனத்தைச் சார்ந்தவர்கள் தேசியவாதக் கருத்துக்களை மேற்கொள்வர். தமது மன எழுச்சிக்கு ஏற்ப அரசியல் தீர்வு பற்றி சிந்திக்கத் தொடங்குவர். அவ்வாறான தருணத்தில் அரசியல் தீர்வு என்பது கடினமானதாகவே இருக்கும். ஆகவே யுத்தம் ஒரு முடிவுறும் ஒரு செயல்முறை அல்ல. அது குரோதத்தையும் எதிர்ப்பு மனோபாவத்தையும் தோற்றுவித் துக் கொண்டே இருக்கும்.

(1995ஆம் ஆண்டு பேராசிரியர் நவரட்ன பண்டா எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்),

தமிழில்: கச்சி முஹம்மது

## சூரசம்ஹாரம் நவம்பர் 18ஆம் திகதிநடைபெறுவதே உசிதமானது...

(04 ஆம் பக்கத், தொடர்ச்சி)

இதில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்த இந்து சமய ஆலோசனை சபையினர், இதுவிடயத்தை இளைப்பாறிய உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான நடுநிலைக் குழுவில் முன்வைத்து, அக்குழு எடுக்கும் முடிவை அகில இலங்கை இந்து மாமன்றமும், இந்து கலாசார திணைக்களமும் ஏற்று, அதன்படி அறிவித்தல் வெளியிட்டு இந்து மக்களை வழிப்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டதுடன், இரு பஞ்சாங்கங்களும் இந்த முடிவுக்கு கட்டுப்பட வேண்டிய கடப்பாடு இல்லை எனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்பிரகாரம் கடந்த 6ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில் கொழும்பில் நடந்த நடுநிலைக் குழுக்கூட்டத்தில், ஏனைய அங்கத்தவர்களாக கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ம.சண்முகநாதன், கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர், சிவஸ்ரீ ம.பாலகைலாசநாத சர்மா, திருக்கணித பஞ்சாங்கம் சார்பாக சிவஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஆகியோர் கலந்து கொண்டனர். வாக்கிய பஞ்சாங்கக் கணிப்பாளர் சிவஸ்ரீ வெ. இரகுநாதையர் தன்னால் நேரில் கலந்து கொள்ள முடியாதுள்ளதை குறிப்பிட்டு, தனது 2012.06.14ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதை கவனத்தில் கொண்டு முடிவெடுக்கும்படியும் கேட்டிருந்தார்.

இவ்வருட சூரசம்ஹாரம் திருக்கணித பஞ்சாங்கப்படி நவம்பர் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற வேண்டும் எனவும், வாக்கிய பஞ்சாங்கப்படி நவம்பர் 19 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை நடைபெற வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது தொடர்பான கணிப்பை கவனத்தில் எடுத்துக்கொண்ட நடுநிலைக்குழு ஜூன் 16ஆம் திகதியன்றும், ஜூலை முதலாம் திகதியன்றும் நடந்த ஆலோசனைக் கூட்டங்களின் அறிக்கைகளையும் அக்கூட்டங்களின்போது திருக்கணித, வாக்கிய பஞ்சாங்கக் கணிப்பாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்துமூலமான கருத்துக்களையும், கம்பவாரிதி இ. ஜெயராஜ் சமர்ப்பித்த எழுத்து மூலமான கருத்துக்களையும் ஆராய்ந்தது.

இதன்படி நடுநிலை குழு தன் முடிவை பின்வருமாறு அறிவித்துள்ளது.

திருக்கணித, வாக்கிய பஞ்சாங்கங்களுடன் இந்தியாவிலிருந்து சுத்த வாக்கிய (பாம்பு) பஞ்சாங்கத்தையும் குழு கவனத்தில் எடுத்தது. திருக்கணித பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டிருப்பது போலவே சூரசம்ஹாரம் நவம்பர் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை என்றே இதிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாக்கிய பஞ்சாங்கப்படி சஷ்டி திதி 18ஆம் திகதி மாலை 5.27க்கு தொடங்கி, மறுநாள் 19ஆம் திகதி மாலை 3.47க்கு முடிவடைவதாகவும்; திருக்கணித பஞ்சாங்கப்படி 18ஆம் திகதி காலை 11.24க்கு தொடங்கி மறுநாள் 19ஆம் திகதி காலை 9.31க்கு முடிவடைவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சூரசம்ஹாரம் சஷ்டி திதியன்று சாயங்காலம் நடைபெற வேண்டும் என்பது 'ஸ்கந்த மகாபுராணம்' என்ற உப ஆகமத்தின் விதியாகும். சாயங்காலம் என்று குறிக்கப்படுவது மாலை 4.30 மணியிலிருந்து 6.00 மணி வரையிலான காலப்பகுதியாகும்.

வாக்கிய பஞ்சாங்கத்தில் 19ஆம் திகதி மாலை 3.47க்கு பின்னரே சூரசம்ஹாரம் நடைபெறலாம் என அதாவது சஷ்டி திதிக்குப் பின்னர் சூரசம்ஹாரம் நடைபெறலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை குழு கவனத்தில் எடுத்தது. அதற்கான காரணம் சஷ்டி அபராண காலத்தில் (பின்னேரம்) இருப்பதால் அது கவனத்திற்கு எடுக்கப்பட்டு, 19ஆம் திகதி (திங்கட்கிழமை) சாயங்காலம் சூரசம்ஹாரமும், மறுநாள் 20ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) காலை பாரணையும் என வாக்கிய பஞ்சாங்கம் முடிவுக்கு வந்துள்ளது. ஆகவே, அவர்களது கணிப்புப்படி சூரசம்ஹாரம் சஷ்டி திதி முடிவடைந்த பின்னரே நடைபெறவுள்ளதை வாக்கிய பஞ்சாங்கம் ஏற்றுக் கொள்கிறது. அதற்காக அவர்கள் அபராண காலத்தை காரணம் காட்டியுள்ளார்கள் என்பது தெளிவாகிறது.

திருக்கணித பஞ்சாங்கப்படி சஷ்டியின் முக்கிய வியாபகம் 18ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) இருப்பதால் அன்றே சூரசம்ஹாரம் நடைபெற்று மறுநாள் காலை பாரணை இடம்பெற வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

பாரணை என்பது சூரசம்ஹாரத்திற்குப் பின்னரே இடம்பெற வேண்டும் என்பதேயன்றி அது ஸப்தமி திதியில் இடம்பெற வேண்டும் என்பது ஒரு பிரமாணம் அல்ல என்பதையும் குழு கவனத்தில் எடுத்தது.

எமது முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துக்களையும், இந்திய சுத்த வாக்கிய பஞ்சாங்கத்தின் முடிவினையும் கவனத்தில் எடுத்து ஆராய்ந்த போது இவ்வருட சூரசம்ஹாரம் நவம்பர் 18ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) சாயங்காலம் நடைபெற்று, மறுநாள் 19ஆம் திகதி (திங்கட்கிழமை) காலையில் பாரணை இடம்பெறுவதே உசிதம் என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தீர்மானம் நந்தன வருட கந்தசஷ்டி விரதம் சம்பந்தப்பட்டதே தவிர, இரு பஞ்சாங்கங்கள் பற்றிய விமர்சனமல்ல என்பதை தெளிவுபடுத்துகிறோம்.

கந்தசஷ்டி விரதம் தொடர்பான நடுநிலைக் குழுவின் மேற்படி தீர்மானத்தை பொதுமக்களுக்கு அறியச் செய்யும் வகையில், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சார்பாக அதன் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பாக, அதன் பொதுசெயலாளர் கந்தையா நீலகண்டன் ஆகியோர் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள ஊடகங்களுக்கான அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழர்களின் தொல்லியல் கருவூ
# யாழ்ப்பாண கோட்



இக் கோட்டை யாழ்ப்ப
ஐரோப்பியக் குடியேற்றவாத ஆட்
காலத்தில் கட்டப்பட்ட கோட்டை
போத்துக்கீசரால் அமைக்கப்பட்
பின்னர் ஒல்லாந்தரால் இடித்து மீ
1980களின் இறுதிக்காலம் வ
இருந்த இக் கோட்டை பின்
உள்நாட்டுப் போரின் தாக்கத்
சிதைவடைந்து காணப்ப

ஒல்லாந்தரால் இறுதிவடிவம் கொடுக்கப்பட்ட இக்கோட்டையானது நட்சத்திரவடிவில் அதன் அடித்தளத்தைக் கொண்டுள்ளது. இக்கோட்டையின் தோற்றக்காலத்தை யாழ்ப்பாணத்தின் மீதான பராந்தகச்சோழனின் ஆட்சிக்காலத்துடன் இணைக்கப்படக் கூடியதாகவுள்ளது. இக்கோட்டை அமைந்துள்ள நிலப்பரப்பின் தோம்புப் பெயர் சோழவணிக கணமொன்றுக்குரியதாகப்படுவதிலிருந்து இக்கோட்டையரசனின் தோற்ற காலத்தினை கி.பி.11ம் நூற்றாண்டுக் காலத்துடன் கொள்ள முடியும். யாழ்ப்பாணக் கோட்டையின் இடிபாடுகளுக்குள்ளிலிருந்து ஏராளமான சோழர் காலத்திற்குரிய மட்பாண்டங்கள் சேகரிக்கப்பட்ட வகையிலிருந்து இக்கருத்தினை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

போர்த்துக்கேயருடைய யாழ்ப்பாண வருகையுடன் (கி.பி. 1619) சோழர் காலத்துக் களிமண் கோட்டை புதுப்பிக்கப் பெற்று ஒரு சிறிய வடிவத்தினைப் பெற்றுக் கொண்டது. கோட்டையின் மையப்பகுதியில் காணப்படும் சிறிய கத்தோலிக்க தேவாலயம் (ஓ.எல்.ஆர்.சேர்ச்) போத்துக்கேயர் காலத்து யாழ்ப்பாணக் கோட்டையின் மையப்பகுதியாக விளங்கியது. ஒல்லாந்தர் வசம் யாழ்ப்பாணம் கையளிக்கப்பட்டதுடன் (1696) யாழ்ப்பாணக் கோட்டை அகல்விக்கப்பட்டு நட்சத்திரவடிவினைப் பெற்றுக் கொண்டது. யாழ்ப்பாணக் கோட்டை ஒரு தொல்லியல் கருவூலமாகும். தமிழ்க் கல்வெட்டுக்கள் பல அதன் புறச்சுவர்களில் மறைத்து வைத்துக் கட்டப்பட்டுள்ளன. கோட்டைச் சுவர்களினுள்ளே தொல்லியல் கருவூலங்கள் காணப்படுகின்றன. இதனை முழுமையான ஆய்விற்கு உட்படுத்தும் போது வரலாற்றுத் தகவல்கள் பல எமக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்புள்ளது.

இக் கோட்டை யாழ்ப்பாணத்தை ஐரோப்பியக் குடியேற்றவாத ஆட்சியாளர்கள் ஆண்ட காலத்தில் கட்டப்பட்ட கோட்டையாகும். முதலில் போத்துக்கீசரால் அமைக்கப்பட்ட இக் கோட்டை பின்னர் ஒல்லாந்தரால் இடித்து மீளவும் கட்டப்பட்டது. 1980களின் இறுதிக்காலம் வரை நல்ல நிலையில் இருந்த இக் கோட்டை பின்னர் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் தாக்கத்தால் தற்போது சிதைவடைந்த நிலையில் காணப்படுகின்றது.



யாழ்ப்பாண அரசு 1619 இல் போத்துக்கீசரின் நேரடி ஆட்சியின் கீழ் வந்ததும், தலைநகரத்தை நல்லூரிலிருந்து அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு மாற்றினர். அங்கே யாழ்ப்பாணக் குடாக்கடலை அண்டி ஒரு கோட்டையையும் கட்டினார்கள். 1619 ஆகஸ்ட் மாதத்தில் பாதுகாப்புக்காகக் கோட்டையொன்றைக் கட்டிக்கொள்ள கோவாவிலிருந்த தலைமையகத்திலிருந்து பிலிப்பே டி ஒலிவேராவுக்கு அனுமதி கிடைத்திருந்தது எனினும் பொருத்தமான இடமொன்றைத் தெரிவுசெய்து கோட்டையின் கட்டிடவேலை 1625 ஆம் ஆண்டிலேயே ஆரம்பமானது. 1629இல் இது உபயோகத்திலிருந்ததெனினும், 1637இல் கூட இது முற்றாகக் கட்டிமுடிக்கப்படவில்லையென்றே தெரிகிறது. இது கிட்டத்தட்டச் சதுர வடிவமானது. நான்கு மூலைகளிலும் அமைந்த காவலரண்களுடன், ஒவ்வொரு பக்கச் சுவர்களின் மத்தியிலும் அரைவட்ட வடிவிலமைந்த அரண்களும் இருந்தன. கோட்டைக்குள்ளே கத்தோலிக்கத் தேவாலயமொன்றும், கப்டன் மேஜரின் வீடும், வைத்தியசாலையொன்றும் மேலும் சில முக்கியமான கட்டிடங்களும் இருந்தன. போத்துக்கீசரின் யாழ்ப்பாண நகரம் கோட்டைக்கு வெளியிலேயே இருந்தது.

1984-1987 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் பெரும்பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோதும், யாழ்ப்பாணக் கோட்டை இராணுவத்தின் வசமே இருந்து வந்தது. 1989 ஆம் ஆண்டில் இந்திய அமைதிகாக்கும் படை யாழ்ப்பாணத்தில் இருந்து

## லமான
## ட்டை

ாழ்ப்பாணத்தை
த ஆட்சியாளர்கள் ஆண்ட
காட்டையாகும். முதலில்
க்கப்பட்ட இக் கோட்டை
த்து மீளவும் கட்டப்பட்டது.
் வரை நல்ல நிலையில்
பின்னர் இடம்பெற்ற
தாக்கத்தால் தற்போது
ாணப்படுகின்றது. ”

வெளியே பின்னர் கோட்டையை முற்றுகையிட்ட புலிகள் பல மாதங்களின்பின் அதனைக் கைப்பற்றிக்கொண்டனர். கைப்பற்றிய சிறிது காலத்தில் மீண்டும் இவ்வாறான நிகழ்வைத் தடுக்க கோட்டையின் பெரும்பகுதி புலிகளின் ஆலோசனையின் கீழ் அழிக்கப்பட்டது. 1995 ல் யாழ்ப்பாணத்தை இலங்கை இராணுவம் மீண்டும் கைப்பற்றியபோது இக்கோட்டையின் எச்சங்கள் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்தினுள் வந்தன.



# யாழ்ப்பாணத்து தட்டிவான்

தட்டிவான் யாழ்ப்பாணத்தில் பிரபலமான வாகனம். எனக்கு மிகவும் பழக்கப்பட்டது பருத்தித்துறையில் தொடங்கி நெல்லியடி ஊடக கொடிகாமம் போகும் தட்டிவான் தான். பிரிட்டிஷ்கார ஊின் தயாரிப்பு. இந்த தட்டிவானில் பயணம் செய்தால் நீங்கள் உலகத்தின் எந்த மூலையில் இருக்கும் வாகனங்களிலும் பயணம் செய்யலாம்.முதலில் தட்டிவானின் வடிவமைப்பை பார்ப்போம். முன்பக்கத்தில் மட்டும் கண்ணாடியுள்ள வாகனம். மக்கள் இருக்கும் இடப்பகுதி எல்லாம் திறந்தவெளி. சாவகச்சேரி சந்தைக்கு போகின்ற குஞ்சி ஆச்சி வெத்திலை சப்பித் இருத்தும் கலை இவர்களுக்குத் தான் தெரியும்.நெல்லியடிச் சந்தியில் அரைமணித்தியாலமாக உறுமிக்கொண்டே இருக்கும் சிலவேளைகளில் வெளிக்கிடுவதுபோல் எடுத்து அப்படியே பஸ் ஸ்டாண்டை ஒரு சுற்றுச் சுற்றி திரும்ப அதே நிண்ட இடத்தில் கொண்டுவந்து நிப்பாட்டுவார்கள். சிலவேளை சீரிபி தூரத்தில் வ்ருகின்றது என்றால் மட்டும் உடனே எடுத்துப்போடு வார்கள். ஆனாலும் கோயில் சந்தை. அந்தணத் திடலில் சில நிமிடங்கள் எப்படியும் நிண்டுதான் எடுப்பார்கள். திரும்ப மாலையில் கொடிகாமத்தில் இருந்து தட்டிவான் தன் பயணத்தை



துப்ப ஏதுவானது. பின்பக்கத்தில் இருக்கும் பலகையில் மீன் பெட்டிகள், மரக்கறி மூட்டைகள் முடிந்தால் மனிதர்களைக்கூட ஏற்றிச் செல்லும் அதிசய வாகனம்.

எப்படியும் காலை 7 மணிக்கு நெல்லியடிச் சந்திக்கு வந்துவிடும். சனமாக இருந்தாலும் கொண்டக்டர் விடமாட்டான் அண்ணே இன்னும் கொஞ்சம் பொறுங்கோ சனம் வரட்டும் என எப்படியும் அரை மணித்தியாலம் அங்கேயே வைத்திருப்பான். சில்வேளை ட்ரைவரே தனக்கு தெரிந்தவர்களுக்கு இப்போ எடுக்கமாட்டான் பக்கத்து சங்குண்ணி கடையில் தேத்தண்ணி குடித்துவிட்டு வாருங்கள் என்பார்.

பெரும்பாலும் ஒரே ஆட்களே தட்டிவானில் பயணிப்பார்கள். இவர்கள் சாவகச்சேரியில் வேலை பார்ப்பவர்கள், கொடிகாமம் சந்தையில் வியாபாரம் செய்பவர்கள், என ஒரே மக்கள் செல்வதால் அவர்களுக்கு பல்ரையும் பழக்கமாய் இருக்கும் இதனால் ஒருவர் வரப்பிந்தினால் கூட ட்ரைவருக்கு உரிமையாக தம்பி ஆச்சி வரவில்லை சின்னத்தம்பி அண்ணை வரவில்லை கொஞ்சம் பொறுங்கள் என கூறுவார்கள்.சீட்டுகள் பெரும்பாலும் மரத்தாலே ஆனவை. பின்னுக்கு அரைமுதுகுதான் சாஞ்சு இருக்கமுடியும். இரண்டு சீட்டுக்கு இடையில் தேவைப்பட்டால் இன்னொரு பலகை போட்டு அடிசனலாக ஆட்களை

நெல்லியடி ஊடக பருத்துறைக்கு செல்லும். தொண்டை மாணாறு செல்வச் சன்னதித் திருவிழா நேரத்தில் நெல்லியடியி லிருந்து கோவில் வரை ஸ்பெசல் சேர்விஸ் விடுவார்கள். அந்த அனுபவமும் சுவையானது. இதனை விட அச்சுவேலியில் இருந்தும் தட்டிவான் சில இடங்களுக்குச் செல்வது ஆனாலும் பயணம் செய்து பழக்கமில்லை.

ஏனைய மாவட்டங்களில் நான் தட்டிவான் கண்டதில்லை. வவுனியா, திருகோணமலை, நுவரேலியாப் பகுதியில் சிறிய வான்களில் மக்களை அடைந்து கொண்டு செல்வதைக் கண்டிருக்கின்றேன். கஸ்டமான பயணம் என்றாலும் நம் மக்கள் மகிழ்ச்சியுடன் பயணிப்பார்கள்.

வடபகுதியை போர் மேகம் சூழ்ந்து இருந்த வேளை மக்களின் தோழனாக பயணங்களின் போது துணை இருந்த தட்டி வான் உயிரை கையில் பிடித்துக்கொண்டு இடம் பெயர்ந்த மக்களுக்கு உறைவிடமாகவும் இருந்ததை மறக்க முடியாது.

வட பகுதி தமிழர்களின் வரலாற்றில் வடுவாக பதிந்த யுத்த காலத்தில் நோய் நொடிகளாலும் காயங்களாலும் துன்புற்றோரை காவிச்செல்லும் அம்புலன்சாகவும் தட்டி வான் துணை புரிந்தது மக்களின் மனதில் பதிந்த ஒன்று. தட்டி வான் ஒரு காலத்தில் தமிழர்களின் போக்கு வரத்தில் எவ்வாறு துணை புரிந்தது என்பதை இன்றைய தலை முறையினர் மறந்து விட்டனர் .

# காய்கறிகள், பழங்கள் கொண்டு செல்ல பிளாஸ்டிக் கூடைகளை பயன்படுத்துவது கட்டாயம்

பயிர் செய்யப்படும் இத்திலிருந்து சந்தைக்கு காய்கறிகள் மற்றும் பழங்களை எடுத்து வரும்போது பிளாஸ்டிக் கூடைகள் பயன்படுத்தப்பட வேண்டியதனை நுகர்வோர் அதிகார சபை கடுமையாக எமுல்படுத்தியுள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிவித்தலின்படி தக்காளிக் காய் அல்லது பழம், கரட், காட்டுப் பாகற்காய், குடை மிளகாய், பசளி, கண்டங்கத்தரிக்காய், பாகற்காய், பூ. கோவா, சலாது இலை, கறி மிளகாய், வெள்ளரிக் காய் ஆகிய காய்கறிகள் பிளாஸ்டிக் கூடைகளில் எடுத்துவரப்பட வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இவ் விதிமுறைகளை மீறி செயற்படுவோருக்கு எதிராக நுகர்வோர் அதிகார சபை சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும். இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டதற்கு அமையவே இம்முறைமை பின்பற்றப்படுவது குறிப்பிடத்தக்கது.

# கொற்றாவத்தை சித்தி விநாயகர் தேவஸ்தான கும்பாபிஷேகம்

## விசேட பூசை, வழிபாடுகள் ஏற்பாடு

கரவெட்டி, கொற்றாவத்தை செட்டிதறை ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் புனருத்தாரண வேலைகள் செய்யப்படவிருப்பதால் இன்று (வெள்ளிக்கிழமை) பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இடம்பெறுகிறது.

காலை 5.47 முதல் 6.55 மணி வரையிலான சுப முகூர்த்த வேளையில் நடைபெறவிருக்கும் பாலஸ்தாபன அபிஷேகக் கிரியைகளை வேத சிவாகம ஜோதிட பூஷணம் சிவஸ்ரீ நா.பாலசுப்பிரமணியக் குருக்கள் பிரதம குருவாக விருந்து நடத்திவைப்பார். (க)

# போதைப் பொருள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வு

(மாவிட்டபுரம்)

சர்வதேச போதைப்பொருள் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினால் விழிப்புணர்வு நிகழ்வு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடம்பெற்றது. வடபிராந்திய நல்லொழுக்க சம்மேளன தலைவர் க.புஸ்பராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,

போதைப்பொருள் பாவனையால் உடலுக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டது இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்பிராந்திய கல்வி வைத்திய உத்தியோகத்தர் வைத்திய கலாநிதி வை.யோகேஜ்வரனும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் வீ.கே.இரத்தினகுமாரும் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டனர்.

# கிராம சேவையாளர்களுக்கு மூன்று நாள் பயிற்சிப் பட்டறை

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற கிராம சேவையாளர்களுக்கான மூன்று நாள் பயிற்சிப் பட்டறை ஒன்று நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இம் மூன்றுநாள் பயிற்சி பட்டறையில் கிராம சேவையாளர்களுக்கான சட்டம், நிர்வாகம் போன்ற துறைகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அரசாங்க சேவைப் பயிற்சி நிறுவனமும், யு.என்.டி.பியின் பிணக்குகளுக்கு மாற்றுத்தீர்வு காணுவதற்கான நிறுவனமும் இணைந்து இப் பயிற்சிப் பட்டறையை நடத்துகின்றன.

இதுபோன்ற பயிற்சிப் பட்டறைகள் அரசாங்க சேவைப்பயிற்சி நிறுவனம், மற்றும் பிணக்குகளுக்கு மாற்றுத் தீர்வு காணுவதற்கான நிறுவனம் ஆகியன இணைந்து இவ்வருடம் மே மாதம் 3, 4, 5 ஆம் திகதிகளிலும், யூன் மாதம் 25, 26 ஆம் திகதிகளிலும் நடத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கட்டுரை போட்டி

நல்லைக்கந்தன் உற்சவ காலத்தை முன்னிட்டு நடாத்தப்படவுள்ள யாழ்.மாநகராட்சி மன்றத் தின் கலாசார பிரிவால் கட்டுரைப்போட்டி நாளை மறுதினம் 15.07. 2012 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடை பெறும்.

# கும்பாபிஷேகம்

## புன்னாலைக்கட்டுவன் புவனேஸ்வரி

(மருதனார் மடம்)

புன்னாலைக்கட்டுவன் வட அருள்மிகு புவனேஸ்வரி என வழங்கும் மகா நாச்சிமார் ஆலயத்தில் மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா இன்று 13ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. 1008 சங்காபிஷேகத்துடன் அம்பிகை அழகிய பூச்சப்பறத்தில் பவனி வருவாள், தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்படும்.

* * * *

## பண்டத்தரிப்பு மனோன்மணி

(மருதனார்மடம்)

பண்டத்தரிப்பு தேணிக்கட்டு வீதி அருள்மிகு மனோன்மணி (அம்)பாள் ஆலய மகாகும்பாபிஷேகம் கடந்த 8ம் திகதி நடைபெற்றது.

தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகின்றது.

மாலை 6 மணிக்கு அபிஷேகத்தை தொடர்ந்து 7 மணிக்கு சைவப்புலவர் சைவசித்தாந்த கலாநிதி செ.கந்த சத்தியதாசன் அம்பிகையின் கடாட்சம் எனும் தலைப்பில் தொடர் சொற்பொழிவாற்றி வருகின்றார்.

எதிர்வரும் 20ம் திகதி மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும் மகா சங்காபிஷேகமும் நடைபெறும்.

# ரம்புட்டான் வியாபாரிகள் மோதல்: மூவர் காயம்

கண்டி மத்திய சந்தையில் இரு குழுக்களுக்கிடையே நேற்று அதிகாலை இடம்பெற்ற கடும் மோதலில் மூவர் இரத்த காயங்களுடன் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

ரம்புட்டான் பழம் விற்பனை தொடர்பாக இரு வர்த்தக குழுக்களிடையே ஏற்பட்ட கடும் வாக்குவாதம் இறுதியில் கைகலப்பாக மாறியுள்ளது. இதில் சுமார் 20 இற்கும் மேற்பட்டவர்கள் இரு குழுக்களாக பிரிந்து கத்தி மற்றும் வாள் வெட்டில் ஈடுபட்டிருந்ததை தொடர்ந்து அப்பகுதி முழுவதும் நேற்று காலை வேளை பெரும் பதற்றம் நிலவியது.

கண்டி மத்திய சந்தைக்கு முன்பாக ரம்புட்டான் பழ வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இட ஒதுக்கீடு சம்பந்தமாக இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட வாக்குவாதமே இத்தாக்குதல் சம்பவத்திற்கான பிரதான காரணமென பொலிஸ் பேச்சாளர், அத்தியட்சகர் அஜித் ரோஹண கூறினார்.

இம்மோதலின்போது வாள் மற்றும் கிறிஸ் கத்தி பயன்படுத்தப்பட்டதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.

படுகாயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மூவருள் இருவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

# வவுனியா பிரதேச செயலகர் பிரிவு எல்லைக்குள் 26 முதியோர் சங்கங்கள்

வவுனியா பிரதேச செயலகத்தின் எல்லைக்குள் 26 முதியோர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக வவுனியா பிரதேச செயலக முதியோர் மேம்பாட்டு உதவியாளர் அ.பிரகாசினி தெரிவித்தார்.

வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் 26 முதியோர் சங்கங்கள் கடந்த இரு வருடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

முதியோர்களின் நலன் கருதி அமைக்கப்பட்டுள்ள இச்சங்கங்களின் மூலம் முதியோர்கள் தங்களது பிரச்சினைகளை பிரதேச செயலகத்திற்கு தெரிவித்து உரிய அதிகாரிகளின் உதவியுடன் உடனடியாகவும் படிப்படியாகவும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியும்.

இதற்கான முயற்சிகளை பிரதேச செயலகம் முன்னெடுத்து வருகின்றனவெனவும் அவர் கூறினார்.

முதியோர்களின் நலன் கருதி வவுனியாவில் அண்மையில் பட்டானிச்சூர், வேலங்குளம், கந்தபுரம், தோணிக்கல், வெளிக்குளம், நெளுக்குளம், காத்தார் சின்னக்குளம், இராசேந்திரன்குளம், செக்கடிப்புலவு ஆகிய பிரதேசங்களில் முதியோர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# அபராதம் விதிப்பதனால் டெங்கை ஒழிக்க முடியாது

## கொழும்பு மேலதிக நீதவான்

நுளம்பு வளர்வதற்கு ஏதுவாக சூழலை வைத்திருந்தமைக்காக சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு பதிலாக, உரிய பலனை பெறுவதற்கு அப்பகுதிகளில் புகை அடிக்க வேண்டும் என கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன டி அல்விஸ் கூறினார்.

தமது குடியிருப்பு பகுதிகளை டெங்கு நுளம்பு பரவும் விதமாக வைத்திருந்ததாக குற்றம் சுமத்தப்பட்ட 5 நபர்களை முல்லேரியா பொலிஸார் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோதே நீதவான் இவ்வாறு கூறினார்.

சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தி அபராதம் விதிப்பதால் நீதிமன்றத்திற்கு பணம் கிடைக்கும். ஆனால் டெங்கை ஒழிப்பதற்கு இது மாத்திரம் போதாது என நீதவான் கூறினார். புகையடித்தல் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் மூலமே டெங்கை ஒழிக்க முடியும் என அவர் கூறினார்.

குற்றம்சுமத்தப்பட்ட ஐவரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டனர். அவர்களுக்கு தலா 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

# முதியோர் சஞ்சிகை

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு முதியோர்களின் ஆக்கத்தினை உள்ளடக்கிய முதியோர் என்னும் பெயரிலான சஞ்சிகை ஐப்பசி மாதம் முதலாம் திகதி முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் வெளியிடப்படவுள்ளது.

இம்முதியோர் சஞ்சிகைக்கான ஆக்கங்களை பிரதேச செயலர் பிரிவு ரீதியாக பிரதேசத்தில் உள்ள முதியோர் அமைப்புகளிடம் இருந்து பெற்று எதிர்வரும் ஆடிமாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு சகல பிரதேச செயலகங்களுக்கும் முதியோர்களுக்கான தேசிய செயலக பணியகம் அறிவித்துள்ளது.

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கமணி ஆறுமுகம்

யாழ். திருநெல்வேலி கிழக்கு, சட்டநாதர் வீதி, 59/6ஆம் இலக்க இல்லத்தைச் சேர்ந்த திருமதி தங்கமணி ஆறுமுகம் நேற்று முன்தினம் (11ஆம் திகதி) காலமானார்.

இவர், காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுவாமிநாதர் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், ஜெயானி (கனடா), ரவீந்திரன் (விரிவுரையாளர் - யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி தலைவர்- வாழ்வகம், சுன்னாகம்), பரமேஸ்வரன் (கலாசார உத்தியோகத்தர், ஆரையம்பதி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருச்செல்வம் (கனடா) மோகனவதனி (ஆசிரியர் - இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்) விநோதினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தர்சிகா, தர்சன், சாருஜன், கீர்த்தனா, பிரவீனா, கீர்த்திகன், நிவேதிகா, நிவேதனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (12ஆம் திகதி) மாலை நடைபெற்றன.



மக்கள், சமூக சேவையைப் பாராட்டி அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கப் பொதுச் செயலாளர் லயன் ஜெயசங்கருக்கு (சமாதான நீதவான்) பாரம்பரிய சுதேச வித்துவான்கள் சங்கத்தால் 'சமூக ஜோதி' வழங்கி கௌரவிக்கப்பட்டது. *(படம் : வல்வெட்டித்துறை நிருபர்)*

# தலையில் குட்டிக் கும்பிடுவதன் பயன்



விநாயகர் வழிபாடு முதல் வழிபாட்டுக்குரியவர் விநாயகப் பெருமான் ஆவார். விநாயகருக் கென்று சிறப்பான இருவழிபாட்டு முறைகள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று தலையில் குட்டி வழிபடுதலாகும். ஒருதடவை அகத்தியரின் கமண்டலத்தில் அடக்கிய காவிரி ஆற்றுநீரை ஓடவைப்பதற்கு விநாயகர் காகத்தின் வடிவில் சென்று கமண்டலத்தை சரித்தார். இதனால் ஆத்திரமடைந்த அகத்தியர் காகத்தை துரத்திச் செல்ல, விநாயகர் சிறுவனாக மாறி, பின் தனது சுயவடிவத்தைக் காட்டினார் என்பது வரலாறு.

அகத்தியர் சிறுவனுக்கு குட்டுவதற்கு எடுத்த தனது கையால், விநாயகர் வடிவத்தைக் கண்டதும் தனது தலையில் குட்டிக்கொண்டு விநாயகரிடம் மன்னிப்பு வேண்டிக் கொண்டார். அன்று முதலாக விநாயகப் பெருமானும் தலையில் குட்டி வழிபாடு செய்பவர்கள் வேண்டும் வரங்களைக் கொடுத்து வருகிறார்.

தலையில் குட்டும்படி சொன்னாலும் கூட சிலர் தவறுதலாக நெற்றியில் குட்டி வழிபடுகிறார்கள். குட்டிக் கும்பிடும்போது வலது கையால் வலது தலையிலும், இடது கையால் இடது தலையிலும் குட்டிக் கொள்ளல் வேண்டும் அத்துடன் ஐந்து தரம் குட்டுதல் வேண்டும்.

நாம் தலையில் குட்டி விநாயகப் பெருமானை வழிபடும்போது அவரது அருள்மட்டுமன்றி, நமக்கு உடல் ஆரோக்கியமும் கிடைக்கிறது. தலையிலுள்ள நடு மூளைப் பகுதியின் கீழ்ப் பக்கமாக கபச்சுரப்பி காணப்படுகிறது.

இதிலிருந்து ஓமோன் சுரக்கப்பட்டு, அது உடலில் காணப்படும் ஏனைய சுரப்பிகளைத் தூண்டுகிறது. நாம் தலையில் குட்டும்போது, இந்த கபச்சுரப்பி தூண்டப்பட்டு, அதன் சுரப்பு ஏனைய சுரப்பிகளைத் தூண்டி உடலில் ஒரு தெம்பு உற்சாகம் ஏற்படுகிறது.

இதனையே சமய ஞானிகள் அமுதசுரப்பு என்றும், அமுதம் என்றும், அந்த அமுதம் உடலில் உற்சாகத்தை ஏற்படுத்து வதையும் எடுத்துக் கூறினார்கள்.

நாம் இனிமேலாவது விநாயகப் பெருமானை வழிபடும்போது, தலையில் ஐந்து தடவைகள் குட்டி, தோப்புக்கரணம் போட்டு வழிபாடு செய்து அருளையும் ஆரோக்கியத்தையும் பெறுவோமாக!

சைவப் புலவர் .
செ.கந்த சத்தியதாசன்

## முகம்மது நபியின் நல்வாக்குகள்

எவர் ஒரு முஸ்லிமுடைய குறைகளை மன்னித்து விடுகிறாரோ, கியாமத் நாளில் அல்லா ஹீத்த ஆலா அவருடைய குறைகளை மன்னித்து விடுவான். இறை நம்பிக்கையுடனும், நன்மையை நாடியும் ரம்ழானில் ஒருவர் நோன்பு வைத்தால் அவருக்கு முன்சென்ற சிறு பாவங்கள் மன்னிக்கப்படும்.

## அன்பே சிவம்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

(திருமந்திரம்)

## அதிகாலைப் படிப்பில் அதிசிறப்பு உண்டு

தினமும் அதிகாலை நேரத்தில் எழுந்து படிக்கும்படி முன்னைய காலத்தில் மூத்தோர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள். இதனாலேயே பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளை அதிகாலையிலேயே நித்திரையிலிருந்து எழச்செய்து படிப்பதற்கு ஊக்குவித்து வந்திருக்கிறார்கள்.

இந்நேரம் பிரம்மமுகூர்த்தம் என்று சொல்லப்படுகிறது. சூரியோதயத்திற்கு நாற்பத்தி எட்டு நிமிடங்களுக்கு முன் பிரம்ம முகூர்த்தம் ஆரம்பமாகின்றது. பிரம்மா பெயரால் அறியப்படும் இம் முகூர்த்தம் அவருடைய தருமபத்தினியான சரஸ்வதிதேவி விழித்து செயல்படும் நேரம் என்பதே நம்பிக்கை. அதனால் இந்நேரத்தை சரஸ்வதி யாமம் எனவும் அழைக்கப்படுகிறது.

காலையில் கொளுத்தி வைக்கும் குத்து விளக்கின் சக்தி கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் என்பதும் தெரியவந்துள்ளது. அத்துடன் அதி காலையில் எழுந்து படித்தால் அது ஒருபோதும் மனதிலிருந்து மறந்துபோவதில்லை என்பதும் கல்விப் பிரச்சனைகளைக் குறித்த ஆராய்ச்சியின் மூலம் கண்டறியப் பட்டுள்ளது.

இவற்றை மனதில் கொண்டு தான் பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து விளக்கு கொளுத்தி படித்தல் வேண்டும் என்று மூத்தோர்களால் சொல்லப்பட்டுள்ளது.

### இவ்வாரத்தின் சமய நிகழ்வுகள்

**இந்துக்களுக்குரிய விசேட தினங்கள்**

14.07.2012 சனி: ஏகாதசி விரதம், கார்த்திகை விரதம்
16.07.2012 திங்கள்: பிரதோஷ விரதம், ஆடிப்பிறப்பு
18.07.2012 புதன்: ஆடி அமாவாசை விரதம்

**கிறிஸ்தவர்களுக்குரிய விசேட தினங்கள்**

13.07.2012 வெள்ளி: புனித ஹென்றி நினைவு நாள்
16.07.2012 திங்கள்: கார்மேல் மாதா திருநாள்

### கதிர்காமக் கந்தனின் வருடாந்த உற்சவம் .

இலங்கையிலுள்ள கந்த கோட்டங்களுள் ஒன்றாகத் திகழும் கதிகாமக் கந்தன் திருத்தலத்தின் வருடாந்த உற்சவம் இம்மாதம் 19ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தீர்த்தோற்சவம் ஆகஸ்ட் 2ஆம் திகதியன்று இடம் பெறும்.

## ரமழான் மாதம் உதயமாகிறது

முஸ்லிம் மக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கும் ரமழான் மாதம் இம்மாதம் 21ஆம் திகதி உதயமாகிறது. அருள்மறையாகப் போற்றப்படும் அல்குர்ஆன் ரமழான் மாதத்திலேயே அருளப்பட்டது என்பதுடன், இஸ்லாமிய வரலாற்றில் மறுமலர்ச்சிக்கும் எழுச்சிக்கும் அடித்தளமாகவும் திருப்பு முனைகளாகவும் அமைந்த பல நிகழ்வுகளும் இம் மாதத்திலேயே இடம்பெற்றுள்ளன.
இவ்வாறு பலவகையிலும் சிறப்புற்று விளங்கும் ரமழான் மாதத்தில் முஸ்லிம் மக்கள் நோன்பு நோற்பதுடன், தொழுது இறைவணக்கத்தில் ஈடுபட்டு அருள்மறையாம் அல்குர்ஆனை ஓதுவதன் மூலம் அல்லாஹ்வின் அன்பையும் அருளையும் பெற்றுக்கொள்வார்கள்.

## இயேசுநாதரின் நற்போதனைகள்

எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாமல் விழிப்புடன் எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் ஒருவனுடைய மெய்வாழ்வு அவனுடைய செல்வப் பெருக்கில் இல்லை. செல்வமுடைய ஒருவனது நிலம் நன்றாக விளைந்தது. அதைக் கண்டு அவன் தனக்குள் சிந்தனை செய்து, "நான் என்ன செய்வேன்? என் விளைபொருள்களைச் சேர்த்து வைப்பதற்கு இடம் இல்லையே. ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்துப் பெரியவையாகக் கட்டி, எல்லாத் தானியத்தையும் பொருள்களையும் அங்கே சேர்த்து வைத்து, 'நெஞ்சே பல்லாண்டுகளுக்கு வேண்டிய பொருளெல்லாம் உனக்கு இருக்கின்றன நீ கவலையற்று இளைப்பாறு, உண்டு குடித்துக் களிப்புடனிரு என்று சொல்லிக்கொள்வேன் என்றான்.

ஆனால் கடவுள் அவனிடம் 'மதி கெட்டவனே இன்றிரவே உன் உயிர் உன்னை விட்டு நீங்கப் போகிறது. அப்பொழுது நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்? என்று கேட்டார். தனக்காகவே பொருளைச் சேர்த்துக்கொண்டு கடவுளுக்கென்று செல்வமுடையவனாய் இராதவன் இவ்வாறே இருப்பான்.

# சமய தீபம்

## கடவுள் வழிபாடு

கடவுளுடைய திருவடிகளை அடைவதற்காகவே பிறவி எடுத்தோமாதலால், அத்திருவடிகளைச் சிந்தித்தலும், துதித்தலும், வணங்குதலுமே நமது முக்கியமான கடமையாகும். உடம்பு நயப்படுவதற்கு உணவும், மனம் நயப்படுவதற்கு கல்வியும் வேண்டப்படுதல் போல ஆன்மா நயப்படுவதற்கு கடவுள் வழிபாடு தேவை.
கடவுள் வழிபாடு நமது ஒழுக்கத்தையும் சீர்படுத்தக்கூடியது. தீய ஆசைகள் அல்லது தீய எண்ணங்கள் மனதில் எழும் போது சிவ சிந்தனை செய்தால் அச்சிந்தனையானது அத்தகைய தீய எண்ணங்களை சுருக்கி நீள விடாமல் அழித்துவிடுவதுடன் மனதையும் தூய்மையாக்கிவிடும்.

## ஆறுபடை வீடுகளும் அவற்றின் மகத்துவங்களும்

**திருப்பரங்குன்றம்:** தேவேந்திரன் மகளான தெய் வயானையை முருகப்பெருமான் திருமணம் செய்து கொண்ட திருத்தலம் (மதுரைக்கு அருகில்)

**திருச்சீரலைவாய்:**
முருகப் பெருமான் சூரனை வதைசெய்த திருத்தலம் (திருச்செந்தூர்)

**திருவாவினன்குடி:**
மாங்கனி கிடைக்காது ஏமாற்றமடைந்த முருகன் பாலகப் பருவத்தில் துறவியாக வீற்றிருந்த திருத்தலம் (பழநி)

**திருவேரகம்:**
முருகப் பெருமான் தந்தைக்கு பிரணவப் பொருளை உணர்த்திய திருத்தலம் (சுவாமிமலை)

**குன்று தோறாடல்:**
முருகப் பெருமான் வள்ளியை திருமணம் செய்து கொண்ட திருத்தலம் (திருத்தணிகை)

**பழமுதிர்ச்சோலை:**
முருகப் பெருமான் தேவியர் இருவருடன் ஏகாந்தமாய் இருக்கும் திருத்தலம் (மதுரைக்கு அருகில்)

## திருக்குறள் அறிவுப் போட்டி இல: 01

**சரியான விடைகள்**

(1) இடைக்காடர்
(2) முப்பானூல் — வாயுறை வாழ்த்து
உத்தரவேதம் — தமிழ்மறை
தெய்வநூல் — பொதுமறை
பொய்யாமொழி
(3) அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்,
அறத்துப்பால் - 20 அதிகாரங்கள்
(4) ஆற்றின் அளவறிந்து ஈக அது பொருள்
போற்றி வழங்கும் நெறி
48வது அதிகாரம் (வலியறிதல்)
(5) காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
(6) எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.
- 36ஆவது அதிகாரம் (மெய்யுணர்தல்)
எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு
- 43ஆவது அதிகாரம் (அறிவுடைமை)
(7) சூதாட்டத்தில் பெற்ற வெற்றி
வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று
94ஆவது அதிகாரம் (சூது)
(8) கண்ணுள்ளின் போகார் இமைப்பின் பருவரார்
நுண்ணியர்எங் காத லவர்
கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக்கு அறிந்து
(9) 40ஆவது அதிகாரம் (கல்வி)
மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்கு
நீர் ஊறும். அதுபோல மக்களுக்கு கற்ற
கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.
(10) இனிய சொற்கள் இருக்கும்போது அவற்றைத் தவிர்த்து
வன்சொற்களைக் கூறுதல்.

கடந்த மாதம் 22ஆம் திகதி வெளியாகிய மேற்படி போட்டிக் கேள்விகளுக்கு ஏராளமானவர்கள் விடைகளை அனுப்பியிருந்தார்கள். எனினும் ஒரேயொருவர் மட்டுமே பத்துக் கேள்விகளுக்கும் சரியான விடைகளை எழுதியிருக்கிறார். இவரது பெயரும் முகவரியும் வருமாறு:

கே. அரசேஸ்வரன்,
கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

இவருக்கு "தமிழ் நாதம்" விசேட பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது. இவருக்குரிய பரிசான திருக்குறள் நூல் விரைவில் அனுப்பிவைக்கப்படும். இவரைத் தவிர ஆறுபேர் எட்டுக் கேள்விகளுக்கு சரியான விடைகளை அனுப்பியிருந்தார்கள். இவர்களது பெயர் விபரம் வருமாறு:

ச. டினோஜன், குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கு
தி. பானுப்பிரியா, சத்தியசாயி பாடசாலை, மானிப்பாய்
ச. சிவகாந்தன், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை, யாழ்ப்பாணம்
ச. மதுரிகா, குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கு
தி. லோஜினி, வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை
ச. யதுர்ஷன், புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்

திருக்குறள் அறிவுப் போட்டி - இல:02 அடுத்த வாரம் பிரசுரமாகும்.




அதன் மெட்டும் முதல் மூன்று வார்த்தைகளும் தான் அவர்களுக்கும் தெரியும். என் குழந்தைப் பருவத்தில் என் காதில் விழுந்த மெட்டை இந்தக் கனவு எனக்கு மீண்டும் ஞாபகமூட்டியது. அது மட்டுமல்ல. அந்தப் பாட்டின் வார்த்தைகளும் எனக்கெப்படியோ ஞாபகம் வந்து விட்டன. இந்தப் பாட்டு பண்டைக் காலத்திலேயே மிருகங்கள் பாடிய பாட்டு இது. இப்போது தோழர்களே, அந்தப் பாட்டை நான் உங்களுக்குப் பாடிக் காண்பிக்கிறேன். எனக்கு வயதாகிவிட்டது, என் குரலும் கம்மித்தான் இருக்கிறது. ஆனால் என்னிடம் அந்தப் பாட்டின் வார்த்தைகளையும் மெட்டையும் கேட்டுக் கற்றுக்கொண்டு அதை நீங்கள் நன்றாகவே பாடுங்கள். பாட்டின் பெயர் இங்கிலாந்தின் விலங்குகள் என்பதாகும்.

கிழட்டு தளபதி தொண்டையைக் கனைத்துக்கொண்டு பாடத் தொடங்கியது. அதன் குரல் கட்டையாக கம்மித்தான் இருந்தது. ஆனால் அது நன்றாகவே பாடியது. மெட்டும் உற்சாகம் தரக்கூடிய மெட்டுத்தான். பின்வருகிற மாதிரிப் பாடிற்று அது.

இங்கிலாந்தின் மிருகங்களே!
அயர்லாந்தின் மிருகங்களே!
உலகிலுள்ள எல்லா நாட்டு
விலங்குகளே நான் கூறுகிற
இன்பச் செய்தியைக் கேளுங்கள்
சுபிட்சம் மிக்க எதிர்காலச்
செய்தியைக்
கேளுங்கள்உடனேயோ பலநாள்
கழித்தோ வருகிறது அந்தக்
காலம்
கொடுங்கோலன் மனிதன்,
வீழ்ச்சியடைவான், திண்ணம்
இங்கிலாந்தின்
பயன்தரும்
வயல்களில்
விலங்குகளைத்
தவிர வேறுயாரும்
நடமாட மாட்டார்கள்
நம்
மூக்குகளிலிருந்து
வளையங்கள்
மறைந்துவிடும்
நம் முதுகிலிருந்து
சேணங்கள்
மறைந்துவிடும்
அங்குசமும் கால்
முட்களும்
உபயோகமற்றுத்
துருப்பிடித்துவிடும்
கடிக்கும்
சாட்டைகள் ஒரு வழியாக
ஓய்ந்துவிடும்
மனதிற்கு எட்டாத அளவுக்கு
நம் செல்வங்கள் பெருகும்
கோதுமையும் பார்லியும்
கொள்ளும் வைக்கோலும்
மற்றும் அற்புதமான தானியங்கள்
பலவும்
அளவுக்கு மீறியே அன்று
நமக்குக் கிடைத்துவிடும்
இங்கிலாந்தின் வயல்களில்
பிரகாசம் படியும்
அதன் நீர்நிலைகள்
தெளிவோடோடும்
அதன் காற்றே இன்ப மயக்கம்
தரும்
நாம் சுதந்திரமடையும் அந்தத்
தினத்தன்று
அந்த நன்னாளை எதிர்நோக்கி
நாம் உழைப்போம்
அது தோன்றுமுன் நாம்
மடிந்துவிடலாம், எனினும்
பசுவும் குதிரையும் வாத்தும்
கோழியும்
சுதந்திரத்துக்காக ஒன்றாகப்
பாடுபடவேண்டும்
இங்கிலாந்தின் மிருகங்களே,
அயர்லாந்தின் விலங்குகளே
மற்றும் உள்ள எல்லா நாட்டு
மிருகங்களே, கேளுங்கள்
சுபிட்சமும் மகிழ்ச்சியும் மிக்க
எதிர்காலப் புரட்சிச் செய்தியைக்
கவனித்துக் கேட்டு. உலகெலாம்
பரப்புங்கள்

**(நாளை...)**

## விடுகதைகள்



1. இரு கொம்புகள் உண்டு மாடு அல்ல, வேகமாய் ஓடும் மான் அல்ல, கால்கள் உண்டு மனிதனல்ல. - அது என்ன?

2. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது- அது என்ன?

3. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம் - அது என்ன?

4. ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் ஆரவாரம் இராது - அவர்கள் யார்?

5. உடல் சிவப்பு, வாய் அகலம், உணவு காகிதம் - நான் யார்?

**விடைகள்:**
1. சைக்கிள், 2. பட்டாசு, 3. தராசு, 4. எறும்புக் கூட்டம், 5. அஞ்சல் பெட்டி.

## பறவைகள்



ஆஸ்திரேலியாவில் வசிக்கும் மித்ரா என்ற பறவை ஒன்பது நிறத்தில் தெரியும்.

கடல் புறாக்கள் நீரில் மிதந்து கொண்டே தூங்கும். பச்சோந்தியின் கண்கள் எப்போதும் சுழன்று கொண்டே இருக்கும்.

மரங்கொத்திப் பறவை மரத்தை ஒரு நொடிக்கு 20 தடவைகள் கொத்தும். குவாரின் என்ற பறவை மல்லாந்து தூங்கும்.

புறா ஓய்வெடுக்காமல் சுமார் ஆயிரம் கி.மீ. வரை பறக்கும்.

நீரை உறிஞ்சிக் குடிக்கும் பறவை புறா.

ஒரே சமயத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட முட்டைகளை இடும் பறவை நெருப்புக் கோழி.

நியூசிலாந்து நாட்டில் காக்கைகள் கிடையாது.

# சிறுவர் அமுதம்

# தேனீக்களைப் பற்றி அறிவோம்

மனிதனுக்கு பயன்படும் தேனை உற்பத்தி செய்து, பல்வேறு நோய்களுக்கு மருந்தாக இருக்கும் தேனை அளிக்கும் தேனீக்கள், ஈ வகையைச் சேர்ந்தவையாகும்.

தேனீக்கள் ஆப்ரிக்காவில் தோன்றியுள்ளன. அப்படியே ஒவ்வொரு கண்டமாகப் பரவி தற்போது பூமியில் அன்டார்டிகாவைத் தவிர மற்ற அனைத்துப் பகுதிகளிலும் பரவி வாழ்ந்து வருகின்றன.

தேனீக்களில் ராணித் தேனி, ஆண் தேனி, வேலைக்காரத் தேனீக்கள் என மூன்று வகைகள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு உடல் அமைப்பைப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.




இந்த மூன்று தேனீக்களின் கூட்டணியால் உருவாவதுதான் தேன் கூடாகும். பொதுவாக ஒவ்வொரு உயிரினத்திலும் ஆண், பெண் என்ற வேற்றுமையை உணர்த்தும் உடல் உறுப்பு வித்தியாசம் மட்டுமே இருக்கும். ஆனால், தேனீக்களில் மட்டும் மூன்று வகையான உடல் அமைப்புகள் உள்ளன.

ஒரு தேன் கூடு என்றால் ராணித் தேனீ ஒன்றே ஒன்றுதான் இருக்கும். ஆண் தேனீக்கள் நூற்றுக்கணக்கிலும், வேலைக்காரத் தேனீக்கள் ஆயிரக்கணக்கிலும் இருக்கும். இராணித் தேனீ மற்ற இரு வகை தேனீக்களை விட அளவில் பெரியதாக இருக்கும். கூடுகளில் இருக்கும் மற்ற எல்லா தேனீக்களுக்கும் இதுதான் தாயாகும்.

ராணித் தேனிக்கு கொட்டக் கூடிய கொடுக்குகள் உள்ளன. இவை மீண்டும் மீண்டும் வளரும் தன்மை கொண்டவை. ஆனால் ஆண் தேனீக்களுக்கு கொடுக்குகள் இல்லை. அதே சமயம் வேலைக்காரத் தேனீக்களுக்கு விழுந்துவிட்டால் மீண்டும் முளைக்காத கொடுக்குகள் உள்ளன.

ஆண் தேனீக்கள் இராணித் தேனீயுடன் உறவு கொண்டவுடன் உயிரிழந்துவிடும். இராணித் தேனீ முட்டையிலிருந்து முழு வளர்ச்சி அடைந்து பிறக்க 16 நாட்கள் ஆகின்றன. ஆனால், ஆண் தேனீக்கள் பிறக்க 24 நாட்களும், வேலைக்காரத் தேனீக்கள் பிறக்க 21 நாட்களும் ஆகின்றன.

புள்ளிகளை இணையுங்கள்:




**சுடோக்கு எண் 6 விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 7 | 1 | 8 | 3 | 5 | 9 | 4 | 6 |
| 5 | 6 | 9 | 2 | 4 | 7 | 3 | 8 | 1 |
| 3 | 4 | 8 | 1 | 6 | 9 | 5 | 7 | 2 |
| 7 | 9 | 4 | 5 | 1 | 3 | 2 | 6 | 8 |
| 6 | 1 | 5 | 4 | 8 | 2 | 7 | 9 | 3 |
| 8 | 2 | 3 | 9 | 7 | 6 | 4 | 1 | 5 |
| 9 | 8 | 7 | 3 | 5 | 1 | 6 | 2 | 4 |
| 4 | 3 | 6 | 7 | 2 | 8 | 1 | 5 | 9 |
| 1 | 5 | 2 | 6 | 9 | 4 | 8 | 3 | 7 |

**சுடோக்கு எண் 7**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 5 | | | 1 | | | |
| | 9 | 7 | | | | 5 | | |
| 2 | | | | 3 | | 9 | | 6 |
| | | | 9 | | 7 | 6 | | |
| | | 6 | | 8 | | 7 | | |
| | | 2 | 5 | | 4 | | | |
| 6 | | 1 | | 7 | | | | 8 |
| | | 8 | | | | 4 | 7 | |
| | | | 8 | | | 1 | | |

**குழந்தைகளே!**

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

விடயம் 1, 2 இல் ஏதாவதொன்றை பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# எங்கும் நிலா உண்டு

நம்முடைய பூமிக்கு ஒரே ஒரு நிலா உள்ளது. இதைப் போலவே மற்ற கிரகங்களுக்கு நிறைய நிலாக்கள் உள்ளன. சனி கிரகத்திற்கு மட்டும் 61 நிலாக்கள் உள்ளன. இதைத் தவிர சுமார் 200 நிலவுக் குட்டிகள் உள்ளன.

இந்த 61 நிலாவில் மிகப்பெரிய நிலவான டைட்டன். இந்த டைட்டன் நமது பூமியின் தன்மையை ஒத்திருக்கிறதாம். பூமி சுமார் 450 கோடி ஆண்டுகளுக்கு முன்பு எந்த தன்மையில் இருந்ததோ அந்த தன்மையில் தான் தற்போது டைட்டன் உள்ளது.சூரியக் குடும்பத்தில் பூமியைப் போன்று மேகங்கள் மற்றும் இரசாயன நிலைகளைக் கொண்ட இதுவரை அறியப்பட்ட இடமாக டைட்டன் கருதப்படுகிறது. டைட்டனைப் பற்றி இப்போது விஞ்ஞானிகள் ஆய்வுகளை நடத்தி வருகிறார்கள்.

# மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நாடகவிழா-ஒருபார்வை





நாடகம் என்பது மனிதர்களது வாழ்வியலின் வலிகளினை- வெளிப்படுத்துவதுடன் அவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள். அப் பிரச்சினைகளிலிருந்து எவ்வாறு மீண்டெழுதல் என்பன தொடர்பாக அளிக்கை ரீதியில் பார்ப்போருடன் நெருங்கித் தொடர்பாடுகின்றன.

காலமாறுதல்களுக்கு ஏற்ற வகையில் தனது வடிவத்தில் மாற்றங்களினை வெளிக் கொணர்வதுடன் சமூகவியல் பெறுமானத்தில் தாக்கவன்மை மிகுந்ததாகவும் காணப்படுகின்றது. நாடகச் செயற்பாட்டில் ஈடுபடுவதன் ஊடாக பல்வேறு ஆளுமைப்பறை சாற்றல்கள் இடம்பெறுகின்றன.

மாணவர்கள் இச் செயற்பாட்டில் ஈடுபடுவதன் ஊடாக அவர்களிடையே தாக்க வன்மைரீதியானதொடர்பாடல் திறன் விருத்தியடைவதுடன், தலைமைத்துவப்பண்பு,குரூரம் அற்றதன்மை,விட்டுக்கொடுப்பு, பிற்போக்கு தன்னலமற்ற நலநோம்பல், செயற்பாட்டில் ஈடுபடல் என பல விடயங் களினைகுறிப்பிடலாம். இதன் அடிப்படையில் நாடகங்கள் பல தளவெளிகளில் இடம் பெற்றுவருகின்றன.குறிப்பாக பாடசாலைகளில் நிகழும் ஏதாவதுவிழாக்களின்போது ஓர் அங்கமாக இடம் பெற்று வருவதினை அவதானிக்கலாம்.

ஆயினும் அவற்றிற்கு மாறாக மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நாடகத்திற்கான விழா நீண்ட காலமாக இடம்பெற்றுவருவதை குறிப்பிடலாம். அதன் நீட்சியாக நீண்ட காலங்களுக்குப் பின்பு இரவுப் பொழுதில் நாடகவிழா இடம்பெற்றிருந்தமை சிறப்பான விடயமாகும். இவ்வருடம் 55வது விழாவாக இடம் பெற்றிருப்பதையும் சிறப்பாகச் சொல்லலாம்.

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு கலை ரீதியான செயற்பாடுகளில், குறிப்பாக நாடக செயற்பாடுகளில் நீண்டகாலசெழுமையானவரலாறு கள் உண்டு.

ஈழத்துதமிழ் அரங்கவரலாற்றில் நவீன நாடகத்தின் தந்தை என போற்றப்படுகின்ற கலையரசு சொர்ணலிங்கம், இலங்கைதிரைப்படத்துறையில் சாதித்தசி.எஸ் அருமைநாயகம் போன்ற புகழ்பெற்ற கலைஞர்களினை இத்தேசத்திற்குவழங்கியபெருமை மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு இருக்கிறது.

அதன் தொடர்ச்சியாக கல்லூரி இன்றும் பல புகழ் பெற்றகலைஞர் களினைபிரசவித் துக் கொண்டிருக்கின்றது எனில் மிகையில்லை. இச் செயற்பாட்டிற்குகல்லூரியில் இடம் பெற்றுவருகின்ற கலை விழாக்கள் ஆதர்சனமான வையாக விளங்குகின்றன. இதன் அடிப்படையில் பிற விழாக்களினை விட நாடக விழாவானது வழமையிலும் பார்க்க இம் முறை வித்தியாசமானதாக இடம் பெற்றமை சிறப்பான விடயமாகும்.விழாவின்போது வருடாவருடம் இல்லங்களுக்கிடையேயான நாடகப் போட்டிகள் இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மாணிக்கர், சம்பந்தர், சுந்தரர், வாகீசர் எனும் நான்கு இல்லங்கள் இங்கு காணப்படுகின்றன. இவ் இல்லங்களுக்கு இடையிலான போட்டிகள் நாடக செயற்பாட்டில் ஈடுபடும் மாணவர்களுக்கு அனுபவத்தினை பெற்றுக் கொடுப்பதுடன் தொடர்நிலையாக நாடகசெயற்பாட்டில் மாணவர்கள் ஈடுபடுவதற்கான வாய்ப்புநிலையினையும் ஏற்படுத்தும் எனவும் எதிர்பார்க்கலாம்.

இந்த வகையில் இவ் வருடத்திற்கான நாடக விழா நிறுவனர்தினத்திற்கு முதல் நாளான இம்மாதம் (ஜூலை) 3ஆம் திகதியன்று கல்லூரி அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சட்டத்தரணியும் கல்லூரியின் பழைய மாணவனுமாகிய

வி.சுந்தரலிங்கம், சிறப்புவிருந்தினராக பழையமாணவர் சங்கமுன்னாள் உபதலைவர் கே. பஞ்சலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவ்விழாவில் வாகீசர் இல்ல மாணவர்களது நடிப்பில் "சாகாத மனிதம்" சம்பந்தர் இல்ல மாணவர்களின் நடிப்பில் "ஆளவந்தான்",மாணிக்கர் இல்ல மாணவர்களது நடிப்பில் "நல்லகவிளக்கு",சுந்தரர் இல்ல மாணவர்களது நடிப்பில் "முதுமையிலும்" எனும் நான்கு நாடகங்கள் மேடை யேற்றப்பட்டன. இந்த நான்குநாடகங்களில் மாணிக்கர் இல்லத்தின் "நல்லக விளக்கு" எனும் நாடகம் முதல் இடத்தினையும்,சிறந்தநடிகர், சிறந்த நடிகைகளுக்கான விருது களையும் பெற்றுக் கொண்டது. இந் நாடகம் தந்தையா ஸ்ரீ கந்தவேளின் எழுத்து ருவாக்கத்திலும், எஸ். ரி. குமரனின் நெறியாழ்கையில் இடம்பெற்றது. இந்தநாடகத்தில் ஆற்றுகையாளர்களாக- மணிவண்ணனாக ப. தர்ஷன், அந்தோனியாக நா. மோகனராஜன்,காமினியாக அ.குயிலகாந், நவமாகபா. ஜெயரூபன், சிவகுருவாக டில்ஷான், சாயிராமாகசி. சாதுசன், ஜபகராசுசன்ராஜ், நந்தினியாக சருஜன், செபஸ்ரியனாக டனிஸ்ரன், மாலிகாவாக ஒலெக்ஷன், நல்லம்மாவாக பவன், செல்வந்தியாக விதுஷன், நிஷாமாகயோககாந் ஆகியோர் பாகமேற்றிருந்தனர்.

பாடகர்களாக வி. கபில்ராஜ், ர.டிலக்ஷன்,தர்மேந்திரன் ஆகியோர் பங்கு கொண்டனர்.காட்சியமைப்பு செயற்பாடுகளை ப. தர்சன், ச.சன்ராஜ், டில்ஷான், நா. மோகனராஜன் ஆகியோர் மேற்கொண்டனர். இசையமைப்பை கல்லூரியின் ஆசிரியர் திருமதி கி.வசீகரன் மேற்கொண்டார்.நெறால் கிவாத்தியத்தினைகல்லூரி மாணவன் டிலக்ஷன் வழங்கியிருந்தார்.

இந் நாடகமானது சுனாமி பேரவலத்தின் பின்பு சிதைக்கப்பட்ட மக்களது வாழ்வியலினையும் அவர்களது மனப் போராட்டத்தினையும், அத்துயரில் இருந்து எவ்வாறு மீண்டெழுந்து புதிய வாழ்க் கையைக் கட்டியெழுப்புதல் என்பது தொடர்பாகவும் மூவ ினங்களின் ஒற்றுமையுடன் இணைந்த வாழ்க்கை அமைப்பை எடுத்துக் காட்டுவ தாகவும் அமைந்திருந்தது.

சிவகுரு பாத்திர மேற்றுநடித்த டில்ஷான் சிறந்த நடிகராக தெரிவுசெய்யப்பட்டார்.இவர் சுனாமியின் தாக்கம் காரணமாக சற்று மன நிலை குழப் பமடைந்தவராகவும், தனது குடும்பத்தினை இழந்து தவிப்பதில் மனதைவருடும் துயரத்தினையும், தனிமையில் உள்ள நிலையில் எழும் ஏக்கத் தினையும் பல் பரிமாணரீதியில் அளிக்கைசெய்ததுடன் பார்வை யாளரது பாராட்டினையும் பெற்றுககொண்டார். அதே போன்று நல்லம்மா பாத்திர மேற்று நடித்தபவன், ஒருதாய் தனது மகனை இழந்து பரிதவிக்கும் உணர்வினை மிகவும் தத்ரூபமாக வெளிப் படுத்தி பார்யைாளர்களை துயர மான நிலையினுள் கொண்டு சென்றார்.

இதேபோன்று,விருதுகிடைக்காத போதிலும் நிஷாம் பாத்திர மேற்று நடித்த யோகசாந் சிறப் பானஆற்றுகையினைவெளிப்படுத் தியிருந்தார். அனைவரது கூட்டி ணைப்புடன் கூடியநடிப்பும் வெற் றிக்கான வழி கோடலினை ஏற்படுத்தியது என்று சொல்லலாம்.

இத்தகைய ஆற்றுகைகள் மாணவர்களது ஆக்கவியல்சார் ஆளுமையை வெளிப்படுத்தல்க ளுக்கானகள வெளிகளினை சிருஷ்டிக்கும் எனில் மிகையில்லை.

- **எஸ்.ரி.அருள்குமரன்.**

# மரிய சேவியர் அடிகளாரின் குருத்துவப் பொன் விழா நாளை

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபகரும் இயக்குநருமான அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகளாரின் குருத்துவ திருப் பொழிவின் 50ஆவது ஆண்டு நிறைவின் பொன்விழா நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளன. நாளை காலை முதல் மாலை வரை இடம்பெறவுள்ள குருத்துவப் பொன்விழா நிகழ்வுகளின் ஆரம்ப நிகழ்வாக முற்பகல் 10 மணிக்கு யாழ்.தூய மரியன்னை பேராலயத்தில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். தமிழ், சிங்களம், ஆங்கிலம், லத்தீன் மொழிகளில் இத்திருப்பலி இடம்பெறும். இதில் இலங்கைக்கான வத்திக்கான் தூதுவர் மேதகு ஆதிவந்தனைக்குரிய ஆயர் ஜோசப் ஸ்பிற்றறி ஆண்டகை கலந்து கொள்வார்.

மதியம் 12 மணிக்கு திருமறைக் கலாமன்றத்தால் இல.15, றக்கா வீதி, யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள ஓவியக் காட்சியகத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் இடம்பெறும். இதன்போது கொழும்பு பல்கலைக்கழக வேந்தரும் முன்னாள் கொழும்பு மறைமாவட்ட ஆயருமான பேரருள்திரு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்கள் அடிக்கல்லினை நாட்டி வைப்பார்.

மாலை நிகழ்வுகள் 3 மணிக்கு இல.285, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலைத்தூது



கலையகத்தில் இடம்பெறும். கௌரவிப்பு நூல் வெளியீடு ஆகியவற்றைக் கொண்டதாக அமையும். இந்நிகழ்வில் முதல் நிகழ்வாக கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறும். இதற்கு யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமை வகிப்பார்.


இதன்போது மரியசேவியர் அடிகளாருடன் இணைந்து குருத்துவப் பொன்விழா நிறைவைக் காணும் திருமலை- மட்டுநகர் மறைமாவட்ட ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையும் மன்னார் மடுமாதா சிறிய குருமட அதிபர் அருள்திரு சேவியர் குரூஸ் அடிகளாரும் கௌரவிக் கப்படுவார்கள். கௌரவிப்பு உரைகளை பேராசிரியர் ஒக்ஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை, மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை, நல்லை ஆதீனக் குரு ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர பரமாச்சார்ய சுவாமிகள, வண.தம்மகீர்த்தி தேரோ, டாக்டர் ஜின்னா ஷெரியுதீன் ஆகியோர் வழங்குவார்கள்.

கௌரவிப்பு நிகழ்வைத் தொடர்ந்து மரியசேவியர் அடிக-ளின் குருத்துவப் பொன்விழா நினைவு நூலின் வெளியீடு இடம்பெறும். இவ்வெளியீட்டு நிகழ்விற்கு யாழ்.பல் கலைக்கழகத் துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணம் தலைமை தாங்குவார்.

மாலை நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக இலங்கைக்கான வத்திக்கான் தூதுவரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.இந்தியத் துணைத்தூதரகத்தின் பதில் தூதர் ஜி.எஸ்.மார்வா, யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ்.நீதவான் மா.கணேசராஜா, யாழ்.மாவட்ட நீதவான் எ.எ.ஆனந்தராஜா ஆகியோர் கலந்து சிறப்பிப்பார்கள்.

# அண்ணா வெள்ளைமாளிகையில் தம்பி குடிசையில்

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் சகோதரர் கென்யா நாட்டின் குடிசைப் பகுதியில் வசித்து வருகிறார். அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் தந்தைக்கு நான்கு மனைவிகள். வெள்ளையரான ஆன் துன்ஹாமுக்கு பிறந்தவர் தான் பராக் ஒபாமா.



ஜேயல் ஒட்டினோ என்பவருக்கு பிறந்தவர் ஜார்ஜ் ஒபாமா. ஜார்ஜ் தற்போது கென்யா நாட்டின் நைரோபி நகரில், ஒரு குடிசைப் பகுதியில் வசிக்கிறார்.அண்ணன் வெள்ளை மாளிகையில் உலகத் தலைவராக வீற்றிருக்க, நைரோபி குடிசைப் பகுதியில் சாதாரணமாக வாழ்ந்து வருகிறார் ஜார்ஜ்.

ஹொலிவுட் நிருபர் திணேஷ டிசூசா கென்யாவுக்கு சென்று, ஜார்ஜை பற்றிய டாக்குமென்டரி படம் எடுத்துள்ளார்.அதில் அவர் குறிப்பிடுகையில்,


என்னுடைய சகோதரர் உலகத்தையே காத்து வருகிறார்.

அந்த வகையில் என்னையும் காக்கிறார். எங்கள் நாட்டில் எப்போதும் சண்டை நடந்து கொண்டே இருப்பதால், இரண்டாம் மற்றும் மூன்றாம் நாடுகள் பட்டியலில் உள்ளோம். நான் ஆறு மாதக்குழந்தையாக இருந்த போது, கார் விபத்தில் தந்தை இறந்து விட்டார்.

அவர் மெத்தப் படித்தவர் என என் தாய் கூறியிருக்கிறார் என்று தெரிவித்துள்ளார்.

# எகிப்து ஜனாதிபதி தனது நடவடிக்கையை வாபஸ் பெற வேண்டும்: -நீதிமன்றம் அதிரடி

எகிப்தில் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டும் நடவடிக்கையை ஜனாதிபதி முகமது முர்சி வாபஸ் பெற வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.



எகிப்தின் ஜனாதிபதியாக கடந்த 30 ஆண்டுகளாக ஆட்சி செய்து வந்த முபாரக், பொதுமக்களின் தொடர் போராட்டம் காரணமாக பதவி விலகினார். இதனையடுத்து இடைக்கால அரசை இராணுவ உயர்மட்ட கவுன்சில் கவனித்துக் கொண்டது. இதனிடையே கடந்த ஜனவரி மாதம் நாடாளுமன்ற தேர்தல் நடந்தது. இதில் தெரிவு செய்யப்பட்ட மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் முறைகேடாக வெற்றி பெற்றார்கள் என்ற குற்றச் சாட்டு எழுந்ததால், நாடாளுமன்றத்தை கலைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்நிலையில் புதிய ஜனாதிபதி முகமது முர்சி, தேர்தல் நடக்கும் வரை கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்ட வேண்டும் என உத்தரவிட்டார். இந்த உத்தரவை மீறி எகிப்து நாடாளுமன்றம் நேற்று முன்தினம் மீண்டும் கூடியது. இதையடுத்து வழக்கறிஞர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டனர். எனவே நாடாளுமன்றத்தை கலைக்க நாங்கள் இட்ட உத்தரவு தான் இறுதியானது, நாடாளுமன்றத்தை மீண்டும் இயங்கச் செய்யும் நடவடிக்கையை ஜனாதிபதி வாபஸ் பெற வேண்டும் என நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். இதற்கிடையே ஜனாதிபதி முர்சியின் ஆதரவாளர்கள், கெய்ரோவில் உள்ள தாரிர் சதுக்கத்தில் கூடி அரசுக்கு ஆதரவாக கோஷம் போட்டனர்.

# யாசர் அரபாத் விஷம் வைத்து கொல்லப்பட்டாரா? வழக்கு தொடர மனைவி சுகா முடிவு

பாலஸ்தீனத்தின் தலைவர் யாசர் அரபாத், விஷம் வைத்து கொல்லப்பட்டாரா என்பது குறித்து விசாரணை நடத்த அவரது மனைவி சுகா வழக்கு தொடர முடிவு செய்துள்ளார்.



பாலஸ்தீன விடுதலைக்காக 40 ஆண்டு காலம் போராடியவர் யாசர் அராபத். கடந்த 2004ஆம் ஆண்டு, நவம்பர் 11ஆம் திகதி இவர் பாரிஸ் புறநகரில் உள்ள மருத்துவமனையில் இறந்தார்.

அராபத் இறக்கும் போது அவரது உடலில் கொடிய விஷமான பொலொனியம் இருந்துள்ளது என சுவிட்சர்லாந்து நாட்டு ஆய்வகம் சமீபத்தில் ஆய்வு அறிக்கையை வெளியிட்டது.

மேலும், அவர் விஷம் வைத்து கொல்லப்பட்டார் என்பதை உறுதியாக நிரூபிக்க வேண்டுமென்றால், அவர் உடலை மீண்டும் தோண்டியெடுத்து தான் ஆராய்ச்சி செய்ய வேண்டும். அவரது உடலை பிரேதப் பரிசோதனை செய்ய வேண்டும் என கோரும் உரிமை அராபத்தின் மனைவி சுகாவுக்கு மட்டுமே உள்ளது என சுவிட்சர்லாந்து நாட்டின் கதிர்வீச்சு இயற்பியல் துறை தலைவர் பிரான் காய்ஸ் புக்கட் தெரிவித்திருந்தார்.

பாலஸ்தீனத்தின் மேற்கு கரையில் உள்ள, ரமலாவில் அடக்கம் செய்யப்பட்ட, யாசர் அராபத்தின் உடலை மீண்டும் தோண்டியெடுத்து, பரிசோதனை செய்ய பாலஸ்தீன நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளது.

யாசர் அராபத் மரணம் குறித்து விசாரணை நடத்தும்படி, பிரான்ஸ் அரசிடம் சட்ட ரீதியாக அவரது மனைவி சுகா அணுக உள்ளதாக வழக் கறிஞர் பியாரி ஆலிவர் சர் தெரிவித்துள்ளார்.


# நம்பிக்கை வாக்கெடுப்பு: கிரீஸ் அரசு தப்பியது



ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளில் ஒன்றான கிரீஸ் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி உள்ளது. இதற்கிடையே கடந்த மாதம் நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் வலதுசாரியான புதிய ஜனநாயக கட்சி 129 இடங்களில் வெற்றி பெற்றது. பெரும்பான்மை கிடைக்காததால் மற்ற இரு கட்சிகளுடன் இணைந்து, ஜனநாயக கட்சியின் தலைவர் அந்தோணி சமராஸ் பிரதமராக பொறுப்பேற்றார். இந்நிலையில் கிரீஸ் நாடாளுமன்றத்தில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில், கூட்டணி அரசுக்கு ஆதரவாக 179 வாக்குகளும், எதிராக 121 வாக்குகளும் கிடைத்தன.

# உலக பார்வை

## தொடர் தாக்குதல் நடத்துவோம்: மிரட்டல் விடுக்கும் தலிபான்கள்



பாகிஸ்தான் இராணுவத்தினரின் மீது தொடர் தாக்குதல் நடத்துவோம் என பயங்கரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளதாக பாகிஸ்தான் அரசை உளவுத்துறை எச்சரித்துள்ளது.பாகிஸ்தான், செனாப் ஆற்றுப்படுகையில் உள்ள இராணுவ முகாமின் மீது கடந்த 9ஆம் திகதி தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 8 பாதுகாப்புப் படையினர் உயிரிழந்தனர். அந்த இடத்தில் தீவிரவாதிகள் சில துண்டுக் காகிதங்களை விட்டுச் சென்றனர்.அதில் பாகிஸ்தான் வழியாக ஆப்கானில் உள்ள நேட்டோ படையினருக்குத் தேவையான தளவாடப் பொருள்களைக் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதைத் திரும்பப் பெற வேண்டும், இல்லையெனில் பாகிஸ்தானில் எங்கு வேண்டுமானாலும் இராணுவ வீரர்கள் மீது தாக்குதல் நடத்துவோம் என்று மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது.தலிபான் தொடர்பு தீவிராதிகளின் மிரட்டலை உளவுத்துறையும் உறுதி செய்ததாக தி எக்ஸ்பிரஸ் டிரிபியூன் என்ற பத்திரிக்கை செய்தி வெளியிட்டுள்ளது. மற்றொரு உளவுத்துறை நிறுவனம் அளித்த செய்தியில், பிர் சாம்பல் பகுதியில் நடந்த தாக்குதலுக்குத் தடை செய்யப்பட்ட தெஹ்ரிக் இத்தலிபான் தீவிரவாத இயக்கம் தான் காரணம். இந்த இயக்கம் மேலும் பல தாக்குதல்களை நடத்த திட்டமிட்டுள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தது. பொலிஸாரிடமிருந்து மக்கள் விலகியே இருக்குமாறு தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். பாகிஸ்தானில் எங்கு வேண்டுமானாலும் குறிப்பாக பஞ்சாப் மாகாணத்தில் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்தாண்டு அமெரிக்க ஆளில்லா விமானம் பாகிஸ்தானின் பழங்குடியினப் பகுதியில் நடத்திய தாக்குதலில் 24 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். இதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது. இதையடுத்து, பாகிஸ்தான் வழியாக நேட்டோ படையினர் ஆப்கானுக்கு செல்லும் வழியை பாகிஸ்தான் அடைத்தது. சமீபத்தில்தான் இந்த வழியை பாகிஸ்தான் மீண்டும் திறந்தது. இதற்கு பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத இயக்கங்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.



அமெரிக்காவின் யேவா மாகாணத்தில் தேர்தல் பிரசாரத்திற்காக வந்த அதிபர் ஒபாமா அங்கு வந்திருந்த பொதுமக்களை சந்தித்து கைகுலுக்கினார்.

## இத்தாலிக்கு சென்ற அகதிகள் 55 பேர் மரணம்

இத்தாலிக்கு அகதிகளாக படகில் வந்த 55 பேர் குடிக்க தண்ணீர் கிடைக்காமல் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

லிபியாவில் இருந்து 56 பேர் படகு ஒன்றில் இத்தாலியில் அகதிகளாக தஞ்சமடைய கடந்த ஜூன் மாத கடைசியில் வந்துள்ளனர்.

படகு இத்தாலியை நெருங்கிய சமயத்தில், வீசிய புயல் காற்றில் சிக்கி, திசை மாறி மத்திய தரைக் கடல் பகுதிக்குச் சென்று விட்டது. இதனால் கரையை எட்ட முடியவில்லை, எங்கு செல்வதென்று தெரியாமல் கடலில் சில நாட்கள் பயணித்துள்ளனர்.

இந்நிலையில் படகில் இருந்த குடிநீர் தீர்ந்து போனதால், அனைவரும் தாகத்தால் தவித்தனர். சிலர் கடல் நீரைக் குடித்து தாகத்தைத் தணிக்க முயற்சித்தனர். சிலர் நாக்கு வறண்டு மயங்கி விழுந்து விட்டனர். இதனிடையே படகும் சேதமடைந்து, கடலில் மூழ்கத் தொடங்கியது. தண்ணீர் இல்லாமல் பாதி உயிரை விட்டிருந்தவர்கள், கடலில் மூழ்கி இறந்தனர். ஒருவர் மட்டும் படகின் உடைந்த பாகத்தைப் பிடித்துக் கொண்டு கடலில் தத்தளித்தார். துனிசியாவைச் சேர்ந்த மீனவர்கள் அந்த நபரை கடந்த 9ஆம் திகதி மீட்டு கரை சேர்த்தனர். அவர் மூலமே 55 பேர் உயிரிழந்தது தெரியவந்தது.இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் கிழக்கு ஆப்பிரிக்க நாடான எரித்தியா, லிபியாவைச் சேர்ந்தவர்கள் என்று அவர் கூறியுள்ளார். லிபியாவில் புரட்சி ஏற்பட்ட பின்னர், இந்த ஆண்டில் மட்டும் 1,300-க்கும் மேற்பட்டவர்கள் இத்தாலியில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

# மழுப்பல்!



## நடுத்தர மக்களை கிண்டல் செய்யவில்லை என்கிறார் சிதம்பரம்

### பா.ஜ., - சமாஜ்வாதி கட்சிகள் உட்பட, நாடு முழுவதும் கடும் விமர்சனம்

ஐஸ்கிரீமிற்கு 20 ரூபாய் செலவழிக்க தயராக இருக்கும், நம் நாட்டில் உள்ள நடுத்தர வகுப்பினர், அரிசிக்கோ, கோது மைக்கோ, ஒரு ரூபாய் விலை ஏற்றினால், கூச்சலிடுகின்றனர்'' என, மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் கூறியதற்கு, பா.ஜ., சமாஜ்வாதி கட்சிகள் உட்பட, பல கட்சிகளும், பொதுநல அமைப்புகளும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இதையடுத்து, நடுத்தர மக்களை, கிண்டல் செய்யும் வகையில், எதுவும் பேசவில்லை. நான் கூறியதை வேண்டுமென்றே, திரித்து வெளியிட்டு விட்டனர், என, சிதம்பரம் மழுப்பலாக பதில் அளித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம், நேற்று முன்தினம் பெங்களூரில், செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் ஒரு பாட்டில் குடிநீருக்கு, 15 ரூபாய் அல்லது ஐஸ்கிரீமிற்கு 20 ரூபாய் செலவழிக்க தயாராக உள்ள நடுத்தர வகுப்பினர், அரிசிக்கோ, கோதுமைக்கோ, கிலோவுக்கு, ஒரு 'ரூபாய் விலை ஏற்றினால், கூச்சலிடுகின்றனர்" என, கூறினார். நாட்டில் உள்ள நடுத்தர வகுப்பினரை, கிண்டல் செய்யும் வகையில் சிதம்பரம் பேசியதாக, நாடு முழுவதும் இதற்கு கடும் எதிர்ப்பு எழுந்தது.

**கண்டனம்:** ஐக்கிய ஜனதா தளம் கட்சி தலைவர் சரத் யாதவ் இது குறித்து கூறுகையில், சிதம்பரம், சந்தை பொருளாதாரத்தை ஆதரிப்பவர். இதனால் தான், இப்படி பேசியுள்ளார். ஐஸ்கிரீம் பற்றி அவர் பேசியுள்ளதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு சில நேரங்களில், சந்தை பொருளாதாரத்தை ஆதரிப்பவர்களின் வாய்களில் இருந்து, இதுபோன்ற உண்மைகள் வந்து விடுகின்றன, என்றார்.

சிதம்பரம் போன்ற, பண்பாடுள்ள, படித்த ஒரு நபரிடம் இருந்து, இதுபோன்ற கிண்டல் பேச்சு வரும் என, நான் எதிர்பார்க்கவில்லை, என்றார்.

பா.ஜ. செய்தி தொடர்பாளர் ரவிசங்கர் பிரசாத் கூறியதாவது: நடுத்தர வகுப்பினர் ஐஸ்கிரீம், தண்ணீர் பாட்டில் வாங்குவதற்காக அதிகம் செலவிடுவதாகவும், உணவுப் பொருட்கள் விலையை ஏற்றினால், எதிர்ப்பு தெரிவிப்பதாகவும், சிதம்பரம்கூறியுள்ளார். இது, பிரச்னை புரியாமல், இதயமற்ற வகையில் பேசும் பேச்சு. நடுத்தர வகுப்பினர் குறித்து, இது போன்ற வெறுக்கத்தக்க ஜோக் அடிப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும். சாதாரண மக்களின் காயங்களில் உப்பை தடவுவது போல், அவரது பேச்சு உள்ளது. நடுத்தர மக்களுக்கு எதிராக, சிதம்பரம் மட்டுமல்ல, ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் உள்ள, பல அமைச்சர்கள் இதுபோல் கருத்து தெரிவித்துள்ளனர். இவ்வாறு ரவிசங்கர் பிரசாத் கூறினார்.

**மழுப்பல்:**

தான் தெரிவித்த கருத்துக்கு கடும் கண்டனம் எழுந்துள்ளதை அடுத்து, "நடுத்தர வகுப்பினரை, கிண்டல் செய்யும் வகையில், நான் எதுவும் பேசவில்லை" என, அமைச்சர் சிதம்பரம் மழுப்பலாக பதில் அளித்துள்ளார்.

# பிரிட்டனில் இந்திய அழகி மீது இனவெறித் தாக்குதல்



இங்கிலாந்து தலைநகர் லண்டனிலிருந்து ஒளிபரப்பாகும் சனல்-4 என்ற தொலைக்காட்சி பிக் பிரதர் என்ற நிகழ்ச்சியை நடத்தி வருகிறது.

இந்த நிகழ்ச்சியில் பிரபலங்களை ஒரு பூட்டிய வீட்டுக்குள் தங்க வைத்து அவர்களின் நடவடிக்கைகள் ஒளிபரப்பப்படுகின்றன.

இதில், சமீபத்தில் தெரிவுசெய்யப்பட்ட இங்கிலாந்து வாழ் மிஸ் இந்திய அழகி தியானா அப்பல் கலந்து கொண்டார்.

அப்போது, இவருடன் கலந்து கொண்ட கனார் மிக் இன்டயர் என்ற வெள்ளைக்காரர், இந்திய அழகி தியானா அப்பல் மீது இனவெறி நடவடிக்கையை மேற்கொண்டார்.

அந்த இனவெறியை தாங்கிக் கொள்ள முடியாமல் அப்பல் மிகவும் வேதனை அடைந்தார். இனவெறி நடவடிக்கை அதிகமானதால், அதை தாங்க முடியாமல் அப்பல் அழுதார்.

இந்த நிகழ்ச்சி கடந்த ஜுன் மாதம் 25ஆம் திகதி சனல்-4 தொலைக்காட்சியில் ஒளி பரப்பானது. அதை பார்த்த மக்கள் கோபமடைந்தனர்.

மிக் இன்டயர் மீது பெண்கள் சேரிட்டி அமைப்பு களை சேர்ந்த 1000 பேர் புகார் செய்தனர். பிக் பிரதர் நிகழ்ச்சியில் இருந்து அவரை வெளியேற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

அதை ஏற்று அவர் மீது விசாரணை நடைபெற்று வருகிறது.

கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு இதே போன்ற இனவெறி தாக்குதலுக்கு நடிகை ஷில்பா ஷெட்டியும் ஆளானார்.

கடந்த 2007ஆம் ஆண்டு பிக் பிரதர் நிகழ்ச்சியில் பங்கேற்ற இவர், உடன் கலந்து கொண்ட ஜேட் கூடி என்ற வெள்ளைக்கார தொலைக்காட்சி நடிகையால் இனவெறிக்கு உட்படுத்தப்பட்டு அதன் மூலம் கண்டனத்துக்கு ஆளானார்.

# மகளிர் அணி செயலர் படுகொலைக்கு கடும் நடவடிக்கை: ஜெ. உறுதி



அ.தி.மு.க., மகளிர் அணி செயலரை, படுகொலை செய்தவர்கள், யாராக இருந்தாலும், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும என, முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

இதுகுறித்த, அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: தென் சென்னை தெற்கு மாவட்ட, வேளச்சேரி பகுதி, மகளிர் அணி செயலர் பானுமதி, படுகொலை செய்யப் பட்டது கண்டிக்கத் தக்கது. படு கொலையைச் செய்தவர் யாராக இருந்தாலும், அவர்கள் மீது, கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். பானுமதியை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு, ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். பானுமதியின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற, இறைவனை பிரார்த்திக்கிறேன். இவ்வாறு, ஜெயலலிதா கூறியுள்ளார்.

# காந்திக்கு தேசப்பிதா பட்டம் மத்திய அரசு வழங்கவில்லை

மகாத்மா காந்திக்கு, தேசப்பிதா என்ற பட்டத்தை, மத்திய அரசு ஒருபோதும் வழங்கவில்லை என, உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.மகாத்மா காந்தி தேசப்பிதாவாக அறிவிக்கப்பட்டது தொடர்பான விவரங்களை தரும்படி, தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ், சமூக ஆர்வலர் அபிஷேக் கத்யான் என்பவர், உள்துறை அமைச்சகத்திடம், மனு தாக்கல் செய்திருந்தார்.இந்த மனுவுக்கு, மத்திய பொது தகவல் அதிகாரி, கடந்த மாதம் அளித்த பதிலில், மகாத்மா காந்தியை தேசப்பிதாவாக பொது மக்கள் அழைத்தாலும், அது போன்ற ஒரு பட்டத்தை, மத்திய அரசு ஒரு போதும் வழங்க வில்லை" என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன், லக்னோவைச் சேர்ந்த நான்காம் வகுப்பு மாணவி ஐஸ்வர்யா பராஷர், மகாத்மா காந்தி, தேசப்பிதாவாக அறிவிக்கப்பட்டது தொடர்பான உத்தரவின் நகலைத் தர வேண்டும்" என கோரியிருந்தார். இதற்கு பதில் அளித்த அமைச்சகம், அது போன்ற குறிப் பிடத்தக்க ஆவணம் எதுவும், தங்களிடம் இல்லை என பதில் அளித்தது என்பது குறிப்பிடத்தக்

# இந்திய செய்திகள்

## கை, கால் கட்டி சோதனை: போலீசார் மீது பிங்கி சித்திரவதை புகார்



போலீசார் எனது கை, கால்களை கட்டி வலுக்கட்டாயமாக சோதனை செய்தனர். நான் கதறி அழுத போதும், யாரும் கண்டுகொள்ளவில்லை, என, பாலின சர்ச்சையில் சிக்கியுள்ள இந்திய தடகள வீராங்கனை பிங்கி பிரமானிக் சோகத்துடன் தெரிவித்தார்.

மேற்கு வங்கத்தை சேர்ந்தவர் பிங்கி பிரமானிக். ஆசிய தடகளம் உட்பட பல்வேறு போட்டிகளில் தங்கம் வென்றவர். இவர் ஒரு ஆண் என்றும், தன்னை பாலியல் பலாத்காரம் செய்ததாகவும், பெண் ஒருவர் புகார் கொடுத்தார். இதன் அடிப்படையில் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டார். இவரை போலீசார் மிக மோசமாக நடத்துவதாக கூறி மனித உரிமை அமைப்புகள் சார்பில் பொதுநல வழக்கு தொடுக்கப்பட்டது. உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என அரசியல் கட்சிகளும் வலியுறுத்தின. இதனிடையே, பாராசட் கோர்ட், பிங்கிக்கு ஜாமின் அளித்தது. 26 நாட்கள் சிறைவாசத்துக்கு பின் நேற்று விடுதலையான இவர், போலீசார் தன்னை பல்வேறு விதத்திலும் கொடுமைப்படுத்தியதாக குற்றம் சாட்டினார்.

இது குறித்து நிருபர்களுக்கு பிங்கி அளித்த பேட்டி: பாலின சோதனைக்காக போலீசார் எனது கை, கால்களை கட்டி, தனியார் ஆஸ்பத்திரியில் வலுக்கட்டாயமாக பரிசோதனை செய்தனர். நான் தொடர்ந்து அழுது, எதிர்ப்பை தெரிவித்தேன். ஆனால், நான் சொல்வதை கேட்கவில்லை. என் மீது புகார் கொடுத்தவர் எனக்காக சிறிய வேலைகள் செய்தவர். நீண்ட நாட்களாக என்னிடம் இருந்து பணம் பெற முயன்றார். ஆனால் நான் தரவில்லை. எனவே வேறு வழியில் பழிதீர்த்துக் கொண்டுள்ளார்.

**அலைக்கழிப்பு:** அந்த பெண்ணையும் பரிசோதனைக்கு உட்படுத்துங்கள் என்று போலீசாரிடம் கேட்டுக் கொண்டேன். அதை ஏற்கவில்லை. என்னை மட்டும் ஏன் இவ்வளவு அலைக்கழிக்கிறார்கள் என தெரியவில்லை. விடுதலையான நிலையில், என் வீட்டின் சாவியை கூட 4 மணி நேரத்துக்கு பின் தான் போலீசார் தந்தனர். மேற்குவங்க விளையாட்டுத்துறை அமைச்சரை, என் தந்தை ஏற்கனவே சந்தித்தார். நானும் விரைவில் சந்திக்கவுள்ளேன். இந்தப் பிரச்னையில் விசாரணை நடத்தப்பட வேண்டும். எனக்காக ஆதரவு அளித்த அனைவருக்கும் நன்றி. இந்த அக்னிப்பரீட்சையில் இருந்து விரைவில் மீள்வேன்.இவ்வாறு பிங்கி கூறினார்.



ஈரோடு அடுத்த மூலபாளையத்தில், மழை வேண்டி பெண்கள் ஒப்பாரி வைத்து நூதன வழிபாடு நடத்தினர்.

## மத்திய நிதியை பயன்படுத்தாத தமிழக அரசு: ஜெயலலிதாவுக்கு அமைச்சர் ஜெய்ராம் கடிதம்

மத்திய அரசு அளித்த ஏராளமான நிதியை, பயன்படுத்தாமல் வைத்துள்ளீர்கள். எனவே, தேசிய கிராமப்புற குடிநீர் திட்டத்தின் முதல் தவணை நிதியை, உங்களுக்கு தர முடியாது என, தமிழக அரசுக்கு, மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் கடிதம் எழுதியுள்ளார். தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு, மத்திய கிராமப்புற மேம்பாட்டு துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

மத்திய அரசு அளித்த நிதியில், 236.59 கோடி ரூபாயை தமிழக அரசு இன்னும் பயன்படுத்தாமல் உள்ளது. இந்த நிதியை முறையாக பயன்படுத்தி, மாநிலத்தில் குடிநீர் திட்ட பணிகளை விரைவு படுத்தும்படி, அமைச்சர்களுக்கும், குடிநீர் விநியோகத் துறை அதிகாரிகளுக்கும் உத்தரவிடுங்கள். இது தொடர்பான அறிக்கையையும் மத்திய அரசுக்கு தாக்கல் செய்ய வேண்டும். ஏற்கனவே அளித்த மத்திய அரசின் நிதி, பயன்படுத்தப்படாமல் இருக்கும் நிலையில், தேசிய கிராமப்புற குடிநீர் திட்டத்துக்கான (2012-13) முதல் தவணை நிதியான 138.58 கோடி ரூபாயை, உங்களுக்கு அளிக்க முடியாது. தமிழகத்தில் குடிதண்ணீர் திட்டங்களை அமல்படுத்துவதில், மிகுந்த காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில், ரூ.73 லட்சத்தை மட்டுமே பயன்படுத்தியுள்ளீர்கள் இவ்வாறு கடிதத்தில் ஜெய்ராம் ரமேஷ் கூறியுள்ளார்.

# கை, கால்களை கட்டி சோதனையிட்டனர் பாலின சர்ச்சையில் சிக்கிய பிங்கி சோகம்



"பொலிஸார் எனது கை, கால்களை கட்டி வலுக்கட்டாயமாக சோதனை செய்தனர். நான் கதறி அழுத போதும், யாரும் கண்டு கொள்ளவில்லை" என, பாலின சர்ச்சையில் சிக்கியுள்ள இந்திய தடகள வீராங்கனை பிங்கி பிராமனிக் சோகத்துடன் தெரிவித்தார்.

மேற்கு வங்கத்தை சேர்ந்தவர் பிங்கி பிரமானிக். ஆசிய தடகளம் உட்பட பல்வேறு போட்டிகளில் தங்கம் வென்றவர். இவர் ஒரு ஆண் என்றும், தன்னை பாலியல் பலாத்காரம் செய்ததாகவும், பெண் ஒருவர் புகார் கொடுத்தார். இதன் அடிப்படையில் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டார்.

இவரை பொலிஸார் மிக மோசமாக நடத்துவதாக கூறி மனித உரிமை அமைப்புகள் சார்பில் பொதுநல வழக்கு தொடுக்கப்பட்டது. உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என அரசியல் கட்சிகளும் வலியுறுத்தின. இதனிடையே, பாராசட் கோர்ட், பிங்கிக்கு பிணை அளித்தது. 26 நாட்கள் சிறைவாசத்துக்கு பின் நேற்று முன்தினம் விடுதலையான இவர், பொலிஸார் தன்னை பல்வேறு விதத்திலும் கொடுமைப்படுத்தியதாக குற்றஞ்சாட்டினார்.

இது குறித்து நிருபர்களுக்கு பிங்கி அளித்த பேட்டி:

பாலின சோதனைக்காக பொலிஸார் எனது கை, கால்களை கட்டி, தனியார் ஆஸ்பத்திரியில் வலுக் கட்டாயமாக பரிசோதனை செய்தனர். நான் தொடர்ந்து அழுது, எதிர்ப்பை தெரிவித்தேன். ஆனால், நான் சொல்வதை கேட்கவில்லை. என் மீது புகார் கொடுத்தவர் எனக்காக சிறிய வேலைகள் செய்தவர். நீண்ட நாட்களாக என் னிடம் இருந்து பணம் பெறமுயன்றார். ஆனால் நான் தரவில்லை. எனவே வேறு வழியில் பழிதீர்த்துக் கொண்டுள்ளார்.

அந்த பெண்ணையும் பரிசோதனைக்கு உட்படுத்துங்கள் என்று பொலிஸாரிடம் கேட்டுக் கொண்டேன். அதை ஏற்கவில்லை. என்னை மட்டும் ஏன் இவ்வளவு அலைக்கழிக்கிறார்கள் என தெரியவில்லை. விடுதலையான நிலையில், என் வீட்டின் சாவியை கூட 4 மணி நேரத்துக்கு பின் தான் பொலிஸார் தந்தனர்.

மேற்குவங்க விளையாட்டுத் துறை அமைச்சரை, என் தந்தை ஏற்கனவே சந்தித்தார். நானும் விரைவில் சந்திக்கவுள்ளேன். இந்தப் பிரச்னையில் விசாரணை நடத்தப்பட வேண்டும். எனக்காக ஆதரவு அளித்த அனைவருக்கும் நன்றி. இந்த அக்னிப் பரீட்சையில் இருந்து விரைவில் மீள்வேன் - என்றார்.

பிங்கியின் வழக்கறிஞர் துகின் ராய் கூறுகையில், "ஒருவர் தனது சொந்த வீட்டின் கதவை உடைத்து உள்ளே செல்வது விதிமுறை மீறிய செயல் அல்ல. ஆனாலும், சட்டப்பிரச்னை எதுவும் வந்துவிடக் கூடாது என்பதற்காகவே நான்கு மணி நேரம் காத்திருந்து வீட்டின் சாவியை போலீசாரிடம் இருந்து பிங்கி பெற்றார். இவரை ரயில்வே துறையில் இருந்து தற்காலிக பணி நீக்கம் செய்ததை எதிர்த்து மேல்முறையீடு செய்யவுள்ளோம்.

இவரது "குரோமசோம்" பரிசோதனை அறிக்கை, நீதிமன்றில் தாக்கல் செய்யப்படவுள்ளது" என்றார்.

ஆதரவு பேரணி

பிங்கிக்கு நீதி கிடைக்க வலியுறுத்தி நேற்று கொல்கத்தாவில் பேரணி நடந்தது. இதில் பெங்கால் கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் சாம்பரன் பானர்ஜி உள்ளிட்ட பல விளையாட்டு நட்சத்திரங்கள் பங்கேற்றனர்.

பானர்ஜி கூறுகையில், "பிங்கி விஷயத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன. 17 மருத்துவர்கள் அடங்கிய குழு சுமார் 25 நாட்கள் பல்வேறு பாலின பரி சோதனை மேற்கொண்டுள்ளனர். ஆனாலும், பெண் இல்லை என்பதை நிரூபிக்க முடியவில்லையே," என்றார்.

இந்திய கால்பந்து அணியின் முன்னாள் கேப்டன் பாய்ச்சுங் பூட்டியா கூறுகையில், "பிங்கி பல்வேறு பிரச்சினைகளை தாண்டி இந்தியாவுக்காக, தங்கம் வென்றுள்ளார். பல நேரங்களில் அப்பாவிகள் கைது செய்யப்பட்டு, தண்டிக்கப்படுகின்றனர். பிங்கியும் கடந்த சில நாட்களாக தண்டிக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கை கவனமாக கையாள வேண்டும்" என்றார்.

# டெஸ்ட் கிரிக்கெட்டில் மாற்றம் தேவை - ஸ்ரீகாந்த்

வெற்றி, தோல்விகளை நிர்ணயிக்கும் வகையில் மாற்றம் கொண்டு வந்தால் டெஸ்ட் கிரிக்கெட் அழியாது என்று இந்திய கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழுத் தலைவர் ஸ்ரீகாந்த் தெரிவித்தார்.

இருபது ஓவர் கிரிக்கெட்டின் அபார வளர்ச்சி காரணமாக டெஸ்ட் கிரிக்கெட் அழிந்து விடும் என்ற கருத்து பரவலாக எழுந்துள்ள நிலையில், சென்னையில் புதன் கிழமை நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர் மேலும் கூறியதாவது:

கிரிக்கெட், காலத்திற்கு ஏற்றவாறு மாற்றமடைந்து வருகிறது. இப்போது உள்ள சிறுவர்கள் எதிர்காலத்தில் கவாஸ்கர், பிரட்மன். போன்றவர்களையே மறந்து விடுவார்கள். டெஸ்ட் கிரிகெட்டுக்கு என்று தனி சிறப்பு உள்ளது! அதனால் அது அழியாது. இதேபோல, ஒருநாள் மற்றும் 20 ஓவர் கிரிக்கெட்களுக்கும் தனி சிறப்புகள் உள்ளன.

இருபது ஓவர் கிரிக்கெட் இளைஞர்களை பெரிதும் கவர்ந்துள்ளது. கிரிக்கெட் என்பது இந்தியாவில் ஒரு மதம் போன்று ஆகிவிட்டது. கிரிக்கெட் திறமையை யாருக்கும் ஊட்டமுடியாது, அது ரத்தத்திலேயே இருக்கவேண்டும்.

டெஸ்ட் கிரிக்கெட்டைக் காண மைதானத்துக்கு கூட்டம் வர வேண்டும் என்றால், முடிவு தெரியும் வகையில் போட்டியில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும். இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளுக்கு எப்போதும் கூட்டம் இருக்கும்.

இந்தியாவில் 20 ஓவர் போட்டிகள் வெற்றிபெறாது என நினைத்தேன். ஆனால், ஐ.பி.எல் பெரும் வெற்றியடைந்துள்ளது. இப்போது அனைவரும் பொழுதுபோக்கை எதிர்பார்க்கிறார்கள். அது ஐ.பி.எல் போட்டியில் உள்ளது. இந்தியாவில் கிரிக்கெட் பெரும் மாற்றத்துக்குள்ளாகியுள்ளது. முன்பெல்லாம் மைதானங்களில் புற்கள் இருக்காது. இப்போது, அனைத்து மைதானங்களிலும் புற்கள் உள்ளன. இது சிறந்த பீல்டிங்க்கு உதவுகிறது.

கிரிக்கெட்டில் 5 நாளில் இருந்து, 50 ஓவர்களாகவும், பின்னர் 20 ஓவர்களாகவும் மாறியுள்ளது. முன்பெல்லாம் அம்பயர் பணி மிகவும் சிக்கலானது. இப்போது தொழில்நுட்பங்களின் மூலம் அதுவும் எளிமையாக்கப்பட்டுள்ளது. கிரிக்கெட்டில் மிகவும் சிரமமான பணி விக்கெட் கீப்பிங் தான்.

120 கோடி மக்கள் உள்ள நாட்டில் 16 பேரை தேர்வு செய்வது மிகவும் கஷ்டமான பணி. இதில் பலர் ஏமாற்றமடைவது இயல்பு. உலகக் கிண்ணத்தை வென்ற போது என்னை சிறந்த தேர்வுக் குழு தலைவர் என்றனர். டெஸ்ட் போட்டிகளில் தொடர் தோல்விகளை சந்தித்தபோது விமர்சனம் செய்தனர். கிரிக்கெட்டில் இது சகஜம். வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வரும்.

கிரிக்கெட்டில் பல புதிய மாற்றங்களை கொண்டுவர வேண்டும். எதிர்காலத்தில் இந்திய கிரிக்கெட் சிறப்பான நிலையில் இருக்கும். இப்போது சிறிய நகரங்கள்



மற்றும் கிராமங்களில் இருந்தும் சிறந்த வீரர்கள் வருகின்றனர் என்றார்.

அவசரப்பட்டு விட்டேன்

இந்த நிகழ்ச்சியின்போது செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த ஸ்ரீகாந்த், "நான் தலைவராக இருந்தபோது வீரர்கள் ஊதியம் தொடர்பாக எனக்கும், பி.சி.சி.ஐக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அதனால், என் தலைமை பதவி பறிக்கப்பட்டது.

சிறிது காலத்துக்குப் பிறகு மீண்டும் அணியில் விளையாடினாலும், மிக விரைவிலேயே சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன்.

இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் விளையாடி இருந்திருக்கலாம்" என்றார்.

இதே கருத்தை முன்னாள் கேப்டன் கங்குலியும் சமீபத்தில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. 33 வயதில் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்றார் ஸ்ரீகாந்த்.



வட மாகாண கல்வித்திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய் யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் வட மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட வவுனியா ஸ்ரீ சுமண மகா வித்தியாலய வீரர்களையும் மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் மற்றும் விருந்தினர் ஆசிரியர்களுடன் காணப்படுவதைப் படத்தில் காணலாம். (வலிகாமம் நிருபர்)

# குத்துச்சண்டை இன்று

வலிகாமம்

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் முதல் தடவையாக மாகாண மட்டத்திலான குத்தச்சண்டைப் போட்டி இன்று முற்பகல் 10.00 மணிக்கு பருத்தித்துறை வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த வீரர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இந்தப் போட்டியில் வெற்றிபெறும் வீரர்கள் எதிர்வரும் 3ஆம் 4ஆம் 5ஆம் திகதிகளில் கொழும்பு சுகந்ததாஸ உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் குத்தச்சண்டைப் போட்டியில் கலந்துகொள்வர்.

# மாற்று ஆற்றலுடைய மாணவர்களின் விளையாட்டுப் போட்டி மாத இறுதியில்

(வலிகாமம்)

வட மாகாண கல்வித்திணைக் களத்தினால் விசேட தேவை உடைய மாணவர்களின் கல்விப் பிரிவினால் முதல் தடவையாக வட மாகாண மட்டத்திலான விசேட தேவை உடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் இந்த மாத இறுதியில் நடத்தப் படவுள்ளது.

வட மாகாணத்திற்கு, உட்பட்ட ஐநூறுக்கும் மேற்பட்ட வீர,வீராங்கனைகள் கலந்துகொள்ளும் இந்தப் போட்டியில் விசேட தேவை உடைய மாணவர்களுக்கான பல்வேறு விளையாட்டுக்கள் இடம் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக விசேட தேவை உடைய மாணவர்களின் கல்வித் திணைக்கள இணைப்பாளர் திருமதி நிஷாந்தின் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்தாண்டு இந்தப் போட்டிகளை நடத்த நடவடிக்கைகளை எடுத்த போதிலும் இயற்கை இடம் தராமையால் இந்தப் போட்டிகளை உரிய முறையில் நடத்தவில்லையெனவும் இம் முறை இந்தப் போட்டிகள் மிகவும் எழுச்சியுடன் நடைபெறவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# 6,250 வீரர்களிடம் ஊக்கமருந்து சோதனை

லண்டன் ஒலிம்பிக்கில் இது வரை இல்லாத அளவுக்கு வீரர், வீராங்கனைகளுக்கு ஊக்கமருந்து சோதனை நடத்தப்பட உள்ளது. லண்டனில் 30ஆவது ஒலிம்பிக் போட்டி வரும் 27ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 12 ஆம் திகதி வரை நடக்கவுள்ளது. இதில் 204 நாடுகளைச் சேர்ந்த 10,500 வீர, வீராங்கனைகள் பங்கேற்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால், வீரர்களுக்கு நடத்தப்படும் ஊக்கமருந்து சோதனையை இம்முறை அதிக பேரிடம் நடத்த, உலக ஊக்கமருந்து தடுப்பு மையம் (டபிள்யு.ஏ.டி.ஏ.) முடிவு செய்துள்ளதாம். இது குறித்து டபிள்யு.ஏ.டி.ஏ. தலைவர் ஜோன் பகே வெளியிட்ட அறிக்கை:

சர்வதேச ஒலிம்பிக் குழு, லண்டன் ஒலிம்பிக் ஒருங்கிணைப்பு குழுவும் இணைந்து, இம்முறை அதிக ஊக்கமருந்து சோதனையை நடத்த திட்டமிட்டுள்ளது. இவர்களுடன், ஊக்கமருந்து தடுப்பு மையம் ஏற்கனவே தகவல்களை பகிர்ந்து கொண்டுள்ளது.

இதனால், வீர, வீராங்கனைகள் ஒலிம்பிக் கிராமத்தில் காலடி எடுத்து வைத்தது முதல், தீவிர கண்காணிப்புக்கு உள்ளாவர். இதை ஊக்கமருந்து வீரர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தவிர, ஒலிம்பிக் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகபட்சமாக, சந்தேகத்துக்கு இடமான 6,250 பேரிடம் ஊக்கமருந்து சோதனை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

# புத்தகம் எழுதுகிறார் யுவராஜ்



இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங், புற்றுநோயுடன் போராடி மீண்டு வந்திருப்பது குறித்து புத்தகம் எழுதி வருகிறார். தான் உலகக் கிண்ணம் முதல் கடந்த இரண்டு ஆண்டுகளில் நான் நிறையக் கற்றுக் கொண்டேன் என்று கூறியுள்ளார்.

30 வயதாகும் யுவராஜ் சிங், மிக சிக்கலான புற்றுநோயில் இருந்து மீண்டு வந்துள்ளார். 3 மாதங்கள் அமெரிக்காவில் தங்கி சிகிச்சை பெற்று திரும்பியுள்ள யுவராஜ் சிங், புற்றுநோயில் இருந்து மீண்டு வந்தது குறித்து தனது நினைவுகளை புத்தகமாக எழுதி வெளியிட உள்ளார்.

உலகக் கிண்ணஇறுதிப் போட்டிக்கு முன்பு உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டபோது, கடவுளே... இந்தியாவுக்கு, உலகக் கிண்ணத்தை கொடுத்துவிடு. என்ன வேண்டுமோ அதை என்னிடம் இருந்து எடுத்துக் கொள் என்று வேண்டிக் கொண்டேன் என்று யுவராஜ் கூறியுள்ளார்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 13.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது